REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜனவரி 24 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 90 இல. 20 | Monday 24, January, 2022 | 16பக்கங்கள் | 30/-

**வெலிகம பகுதி கடலில்:**

## நீராடச் சென்ற இரு சிறுமிகள் மாயம் ; இருவர் பாதுகாப்பாக மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெலிகம பகுதியில் கடலில் நீராடச் சென்ற இரு சிறுமிகள் நேற்று காணாமல் போயுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். வெலிகம கடல் பூங்கா பிரதேசத்தை 06

## நெற்செய்கை மேற்கொள்ளப்படாத பயிர் நிலங்களில் பாசிப்பயறு செய்கை

**உதவிகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய தீர்மானம்**



நெல் பயிரிட முடியாத நிலங்களில், இடைப் போகத்தில்மேலதிகப்பயிராகபாசிப்பயறுபயிர்ச் செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணித்த போது கிடைத்த தகவல்களைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

நீர்ப்பாசன வசதிகள் இன்மையால், சிறுபோகத்தில் நெல் பயிரிட முடியாத நிலங்களில் இடைப் போகத்தின் மேலதிக பயிராகப் பாசிப் பயறு பயிரிடுவதற்கு அவசியமான விதைகளைப் பெற்றுக் கொள்வதற்கு 06

**அரசியல் கட்சிகளின் முன்மொழிவுகள், அரசின் கொள்கைகள் அடங்கிய**

## புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான வரைவு தயாரிக்கும் வேலைகள் பூர்த்தி



**மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிப்பு; ஏப்ரலில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு**

புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான வரைவொன்றை உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த நிபுணர்கள் குழு அப்பணியை நிறைவு செய்துள்ளது.

கொரோனா நெருக்கடிகளுக்கு மத்தியில் சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக நடைபெற்ற செயற்பாடுகளின் அடிப்படையில் தற்போது இக்குழுவானது தனது வரைவினை இறுதி செய்துள்ளது. 06

**மக்கள் நலன்சார் விடயங்களுக்கு பொறுப்புடன் செயற்படுதல் அவசியம்;**

# அரசியல் தீர்வு மட்டுமே தமிழ் மக்களது பிரச்சினை அல்ல

**அத்தியாவசிய தேவைகள் குறித்தே முதலில் பேசவேண்டும்**



**அரசியல் தீர்வு குறித்து திறந்த மனதுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராகவே உள்ளது என்கிறார் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ**

தமிழ் மக்களின் பிரச்சினை அரசியல் தீர்வு மாத்திரமல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசிய தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின்றோம் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் கட்சிகள் காரசாரமாக விமர்சித்துள்ளன. இவ்வாறானதொரு நிலையில் கூட்டமைப்புடனான 06



யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 12 ஆவது தடவையாக நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் சம்பிரதாயபூர்வமாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் ஹார்ன்போல் மற்றும் தொழில்சார் பிரதிநிதிகளால் திறந்து வைக்கப்பட்டபோது,.... படம் பருத்தித்துறை விசேட நிருபர்



**கப்பல் பெப்.09 திகதியே நாட்டுக்கு வரும்**

## மின்சார சபைக்கு எரிபொருள் வழங்க இருவாரங்களாகும்

03

## தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியை அபகரிக்க சிலர் சதி

**ஒரு குழு தந்திரமாக செயற்படுவதாக தகவல்**

**ஆதரவாளர்கள், அங்கத்தவர்களை நம்ப வேண்டாம் எனவும் ஆனந்த சங்கரி வேண்டுகோள்**




தமிழர் விடுதலைக் கூட்டணியை அபகரிக்க ஒரு குழுவினர் தந்திரமாக செயற்பட்டு வருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர்களை கட்சியின் ஆதரவாளர்களும் மக்களும் நம்பவேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 06

**கொரோனா தொற்று அதிகரிப்பு;**

## சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க கோரிக்கை

**மக்களிடம் டொக்டர் ஹேமந்த வேண்டுகோள்**



நாட்டின் தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. அதிலும் ஒமிக்ரோன் தொற்றின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மதிப்பீட்டின்படி தொற்றில் 30வீத அதிகரிப்பு கணக்கிடப்பட்டுள்ளது.ஒமிக்ரோன் தொற்று வேகமாக பரவும் மாறுபாடு என்று கண்டறியப்பட்டுள்ளபோதும், அதன் பரவலை, சுகாதார முறைகளை கடைபிடிப்பதன் மூலம் மாத்திரமே கட்டுப்படுத்த முடியும். 06

**நாளை செவ்வாய் முதல் ஒரு மணிநேர மின்வெட்டு**

## எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நான்கு மணிநேர மின்துண்டிப்பு

**இலங்கை மின்சார சபை நேற்று அறிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருள் நெருக்கடி காரணமாக நாளை செவ்வாய்க்கிழமை முதல் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளது.நாளை முதல் ஒரு மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டாலும் அதனை மேலும் இரண்டு மணி நேரமாக நீட்டிக்க வேண்டும் என சபை குறிப்பிட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 4 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. 06

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சிபெற**

## IMF இடம் செல்வதே இறுதி தீர்வாக அமையும்

**மு.கா தலைவர் ஹக்கீம் வலியுறுத்து**



நாடு எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதே இறுதித் தீர்வாக அமைய முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு பாரிய வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் நட்புறவு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் 06

## மின்சாரத்தை மீதப்படுத்த வீதி விளக்குகள் அணைப்பு

**அரசுக்கு அமைச்சர் காமினி யோசனை**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கவனத்திற்கொண்டு மின்சாரத்தை மீதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக மின்வலு அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அரசாங்கத்துக்கு யோசனை ஒன்றை முன்வைக்கப் போவதாக தெரிவித்துள்ள அவர், அதற்கிணங்க வீதி விளக்குகளை சில மணித்தியாலங்களுக்கு அணைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். 06

## கொவிட்-19 தொற்றாளர் தொகையில் திடீர் அதிகரிப்பு

**பொறுப்புணர்வுடன் செயற்பட அறிவுரை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் பொது மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என கொரோனா ஒழிப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளர்கள் ஆஸ்பத்திரிகளில் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், இக்காலங்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் கொரோனா வைரஸ் தொற்று 06

## விக்டோரியா நீர்த்தேக்க நீர்மட்டம் குறைவடைவு

**தக்கவைக்க நடவடிக்கை முன்னெடுப்பு**



விக்டோரியா நீர்த்தேகத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது.

இந்நிலையில், நீரை ஓரளவான மட்டத்தில் தக்க வைத்துக் கொள்ளவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக, விக்டோரியா நீர்த்தேக்கத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.போதிய மழைவீழ்ச்சி இன்மையாலே நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைவடைய காரணமாகும்.

அதேநேரம், பொல்கொல்லை நீர்த்தேகத்தின் நீர்மட்டமும் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, நாட்டின் பெரும்பாலான 06

## புலமைப் பரீட்சை வினாத்தாள் மீண்டும் மாணவர் கரங்களில்!

**அன்பான மாணவர்களே..**

**தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சை நேற்றுமுன்தினம் நடைபெற்று முடிந்துள்ளது. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சித்தியடைய வேண்டுமென வாழ்த்துகின்றோம். அதேவேளை பரீட்சை தொடர்பான விதிமுறைகள் கருதி, தினகரனில் கடந்த இரு வாரங்களாக புலமைக் கதிர் (புதன்), வானொலி ஆசான் (வெள்ளி) ஆகிய வழிகாட்டி வினாத்தாள்கள் வெளியிடப்படவில்லை.**



**மீண்டும் அவை இரண்டும் இவ்வாரம் முதல் தினகரனில் வெளியாகவிருக்கின்றன. நாளை மறுதினம் புதன்கிழமை மாணவர் கைகளில் மீண்டும் தவழப் போகின்றது புலமைக் கதிர். எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று 'வானொலி ஆசான்' பரீட்சை வழிகாட்டியும் வழமை போன்று வெளிவரும். உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!**

## ஒரு கோடி ரூபா நகைகளுடன் விமான நிலையத்தில் பெண் கைது

**தீர்வை வரியின்றி கடத்திவர முயற்சி**



கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தீர்வை வரியின்றி மோசடியான முறையில் இலங்கைக்கு தங்கம் கொண்டு வர முயற்சித்த நிலையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

விமான நிலையத்தில் வைத்து போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கண்டியைச் சேர்ந்த 30 வயதுடைய வர்த்தகத்தில் ஈடுபடும் பெண்ணே கைது செய்யப்பட்டவராவார். சந்தேகநபரிடம் இருந்து 06

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்:**

## என்னை கைது செய்யவோ சிறையில் அடைக்கவோ முடியாது

**சாட்சியோ ஆதாரமோ கிடையாது – மைத்திரி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் தம்மை விளக்கமறியலில் வைக்கும் அளவிற்கு போதுமான சாட்சிகளோ அல்லது குற்றச்சாட்டுகளோ கிடையாது.

இத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் தம்மை கைது செய்து சிறையில் அடைக்கப் போவதாக வெளியிடப்படும் செய்திகளில் எந்தவித உண்மையும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 06

**விக்கல் வீராச்சாமி**



இந்திய மீனவர்களின்ர அத்துமீறல எதித்து வடக்கில ஆர்ப்பாட்டங்கள் நடக்குதே, யாராவது கண்டு கொள்ளுறாங்களா, அதால என்ன பிரயோசனம்....

எந்தப் பிரயோசனமும் இல்ல, இவங்க பாட்டுக்கு கத்த வேண்டியது அவங்க தாராளமா வந்து உள்ள மீன எல்லாம் பிடிச்சுட்டு போறாங்க...!!!

# சர்வதேச செய்திகள்

## ஆபிரிக்காவில் தொடரும் சீனாவின் 'கடன் பொறி'



பெல்ட் ரோட் முயற்சிகள் மூலமாக பெரும் எண்ணிக்கையான பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் ஆபிரிக்க கண்டத்தில் அதிகரித்த நிலையில் அந்தப் பிராந்தியத்தில் சீன கடன் பொறி இராஜதந்திரம் தொடர்வதாக விமர்சனம் எழுந்துள்ளது.

ஆபிரிக்கர்கள் சீனாவுக்கு 145 பில்லியன் டொலர் கடன்பட்டிருப்பதோடு இந்த ஆண்டில் இதுவரை 8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மீளளிக்கப்பட்டுள்ளன.

2018 இல் ஆபிரிக்காவில் சீனாவின் முதலீடு 28 வீதம் பங்களிப்புச் செய்திருப்பதோடு இது பிராந்தியத்தில் அதிகரித்து வரும் கடன் சுமையை குறிக்கிறது. இதில் குறைந்தது 18 ஆபிரிக்க நாடுகள் தமது கடன் பற்றி சீனாவுடன் மறுபேச்சுவார்த்தையை நடத்தி வருகின்றன.

சீனாவின் "கடன் பொறி" கொள்கை உலகளாவிய பொக்காக மாறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மடகஸ்கார், மாலைதீவு மற்றும் கஜிகிஸ்தான் நாடுகளும் சீன கடனில் சிக்கி இருப்பதாக கூறப்படுகிறது.

## மின்கட்டண அதிகரிப்புக்கு பாக். எதிர்க்கட்சி எதிர்ப்பு



மின் கட்டணத்தில் எரிபொருள் விலையைச் சரி செய்யும் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள், அத்திட்டத்தை நிராகரித்துள்ளதோடு அறவிடப்பட்டுள்ள பணத்தை மீளச் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளன.

மின் கட்டணத்தில் எரிபொருள் விலையைச் சரி செய்வதன் ஊடாக அதிகப்படியான அறவீடு விதிக்கப்பட்டுள்ளது . இதன் கீழான மேலதிக அறவீட்டுத் தொகையை அடுத்த மாத பட்டியலின் மூலம் பாவனையாளருக்கு மீள வழங்குமாறும் பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளன.

இதேவேளை இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏற்கனவே ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. பெஷாவரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் உள்ளூர் அரசியல் கட்சிகளின் பல தலைவர்களும் கட்சிகளின் தொழிலாளர்களும் பங்குபற்றியுள்ளனர். ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டவர்கள் மின் கட்டணத்தில் எரிபொருள் விலையை சரி செய்யும் திட்டத்திற்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளனர்.

## 'பழமொழி' கூறிய துருக்கி பெண் செய்தியாளர் கைது



துருக்கி ஜனாதிபதியை அவமதித்த குற்றச்சாட்டில் பிரபல செய்தியாளர் செதெப் கபாஸை தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஸ்தான்பூலில் கைது செய்யப்பட்ட கபாஸை அவரது வழக்கு விசாரணைக்காக தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

எதிர்க்கட்சி உடன் தொடர்புபட்ட தொலைக்காட்சி ஒன்றின் நேரடி நிகழ்ச்சியில் ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவானை இலக்கு வைத்து பழமொழிகளை கூறியதாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றசாட்டுக்கு ஒன்று முதல் நான்கு ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

"பிரபலமான பழமொழி ஒன்று உள்ளது அதில், முடிசூடப்பட்ட தலை புத்திசாலியாகிறது என்று கூறப்படுகிறது. ஆனால் அது உண்மையில்லை என்பதை நாம் பார்க்கிறோம்" என்று அவர் தொலைக்காட்சியில் குறிப்பிட்டுள்ளது. "அரண்மனைக்கு நுழைந்த மாத்திரத்தில் காளை மாடு மன்னராவதில்லை. ஆனால் அரண்மனை கொட்டைகையாக மாறிவிடும்" என்ற பழமொழியையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கருத்து பொறுப்பற்றது என்று எர்துவானின் பேச்சாளர் பஹ்ரத்தின் அல்தூன் தெரிவித்துள்ளார்.

'செய்தியாளர் என்று கூறுக்கொள்ளும் ஒருவர் எமது ஜனாதிபதியை அப்பட்டமாக அவமிக்கிறார், இதற்கு வெறுப்பை தூண்டுவதைத் தவிர வேறு நோக்கமில்லை' என்று அவர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

## கிரிபட்டியில் முடக்கம்



தொலைதூர தீவு நாடான கிரிபட்டியில் 10 மாதங்களின் பின் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச விமானப் பயணத்தில் பயணிகளுக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில் அந்த நாட்டில் முடக்கநிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

புதிய கட்டுப்பாடுகளின் படி, மக்களை வீடுகளில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருப்பதோடு சமூக ஒன்றுகூடல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பீஜியில் இருந்து வந்த விமானத்தில் இருந்த சுமார் 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சமூகப் பரவலில் இருந்து நால்வரிடம் நோய்த் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வரை கிரிபட்டியில் ஒரே ஒரு நோய்த் தொற்று சம்பவமே பதிவாகி இருந்தது.

உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும் தீவுகளில் ஒன்றாக கிரிபட்டி உள்ளது. அருகில் இருக்கும் கண்டமான அவுஸ்திரேலியா அந்த நாட்டில் இருந்து சுமார் 4,800 கிலோமீற்றர் தொலைவிலேயே உள்ளது.

## ரஷ்யாவுடனான பதற்றம்:

# அமெரிக்க இராணுவ உதவி உக்ரைனை சென்றடைந்தது



உக்ரைனுக்கான 200 மில்லியன் டொலர் பாதுகாப்பு உதவிப் பொதியை ஏற்றிய முதல் சரக்குகள் அந்த நாட்டை அடைந்ததாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

உக்ரைனுடனான எல்லையில் ஆயிரக்கணக்கான ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டிருக்கும் பதற்ற சூழலிலேயே இந்த இராணுவ உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கன் கடந்த வாரம் உக்ரைனுக்கு பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த 200 மில்லியன் டொலர் பொதிக்கு அமெரிக்கா கடந்த டிசம்பர் மாதம் ஒப்புதல் அளித்திருந்தது.

"ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரைனின் இறைமை மற்றும் ஆட்புல ஒரிமைப்பாட்டை பாதுகாக்கும் தற்போதைய முயற்சியில் உக்ரைன் ஆயுதப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா இதுபோன்ற உதவியை தொடர்ந்து வழங்கும்" என்று அந்நாட்டு தூதரகம் கடந்த சனிக்கிழமை பேஸ்புக்கில் தெரிவித்திருந்தது.

உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சர் இந்த உதவிக்காக அமெரிக்காவுக்கு நன்றி கூறியுள்ளார்.

மறுபுறம் பல்டிக் நாடுகளான எஸ்டோனியா, லத்வியா மற்றும் லிதுவேனியா ஆகியவை அமெரிக்கா தயாரிப்பான பீரங்கி எதிர்ப்பு மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை உக்ரைனுக்கு அனுப்பவுள்ளன. உக்ரைனுக்கு மேற்குலக நாடுகள் ஆயுதங்கள் வழங்குவது மிக ஆபத்தானது என்றும் அது பதற்றத்தை தணிக்க உதவாது என்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கொவ் கடந்த வாரம் கூறியிருந்தார்.

இந்தப் பதற்றத்தை தணிப்பதற்காக உக்ரைனுக்கு நேட்டோ அங்கத்துவத்தை வழங்குவதை தடை செய்யும் ரஷ்யாவின் பிராதான கோரிக்கையை மேற்குலக நாடுகள் நிராகரித்துள்ளன.

இது தொடர்பில் பிளின்கன் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவுக்கு இடையே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தை முன்னேற்றம் இன்று முடிந்தது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்யப் படைகள் எல்லையில் குவிக்கப்பட்ட நிலையில், படையெடுப்பு அல்லது ஊடுருவல் நிகழலாம் என்று மேற்கத்திய, உக்ரைனிய உளவு அமைப்புகள் கூறுகின்றன.

ஆனால் எந்தத் தாக்குதலுக்கும் திட்டமிடவில்லை என்று ரஷ்யா மறுத்துள்ளது.

## சிரியாவில் ஐ.எஸ் குழுவுடன் குர்திஷ் படை தீவிர மோதல்



குர்திஷ்களால் நடத்தப்படும் சிறை ஒன்றில் கைதிகளை விடுவிக்க இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) போராளிகள் முயன்ற நிலையில் வடகிழக்கு சிரியாவில் மோதல் தீவிரம் அடைந்துள்ளது.

ஹசகா நகரில் அமெரிக்க வான் தாக்குதலின் உதவியோடு குர்திஷ் தலைமையிலான படைகள் இந்தப் போராளிகளோடு கடந்த வியாழக்கிழமை தொடக்கம் சண்டையிட்டு வருகின்றன.

சிரியாவில் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் தோற்றகடிக்கப்பட்ட பின் ஐ.எஸ் குழு நடத்தி தீவிர தாக்குதலாக க்வைரான் சிறை மீதான தாக்குதல் உள்ளது.

ஐ.எஸ் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் 3500 பேர் வரை இந்த சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். சிறை உடைப்புச் சம்பவத்தை அடுத்து தப்பிச் செயன்ற நூற்றுக்கணக்கான ஜிஹாதிக்கள் மீண்டும் பிடிபட்டிருப்பதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த சிறைச்சாலையை சுற்றிவளைத்திருக்கும் குர்திஷ் படையினர் அதனை சூழவுள்ள பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர போராடி வருகின்றனர். குடியிருப்பாளர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த மோதல்களில் குறைந்தது 77 ஐ.எஸ் உறுப்பினர்கள் மற்றும் 39 குர்திஸ் படையினர் கொல்லப்பட்டிருப்பதாக கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கொவிட்: நியூசி. பிரதமர் திருமண வைபவம் ரத்து



கொரோனா தொற்றுக்கு எதிராக புதிய கட்டுப்பாடுகளை அறிவித்திருக்கும் நியூசிலாந்து பிரதமர் ஜெசின்டா ஆர்டன் தனது சொந்த திருமண வைபவத்தை ரத்துச் செய்துள்ளார்.


ஒமிக்ரோன் வைரஸ் திரிபு பரவ ஆரம்பித்துள்ள நிலையில் நியூசிலாந்தில் கொவிட் கட்டுப்பாடுகள் உச்ச நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி தடுப்பூசி பெற்ற 100 பேருக்கு நிகழ்ச்சிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதோடு கடைகள் மற்றும் பொது போக்குவரத்துகளில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது திருமண வைபவம் இடம்பெறாது என்று கூறிய ஆர்டன், தம்முடைய நிலையில் உள்ள மற்றவர்களுக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

திருமணம் ரத்து செய்யப்பட்டதைப் பற்றி அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது,

"வாழ்க்கை என்பது இப்படித்தான். வைரஸ் பரவலால் நியூசிலாந்தில் மேலும் ஆயிரக்கணக்கானோர் இதைவிடக் கூடுதலான மனவருத்தத்தையும் இன்னல்களையும் எதிர்நோக்கியுள்ளனர்" என்று குறிப்பிட்டார்.

## பிரியந்த கொலையை ஆதரித்தவருக்கு சிறை




இலங்கை முகாமையாளர் பிரியந்த குமார கும்பலால் படுகொலை செய்யப்பட்டதை நியாயப்படுத்திய 27 வயதான ஆடவர் ஒருவருக்கு பாகிஸ்தான் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் ஒன்று ஓர் ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதித்துள்ளது.

யூடியுபில் அந்த இளைஞன் வெளியிட்ட கருத்து பிரபலமடைந்த நிலையிலேயே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சியல்கோட் மாவட்டத்தில் உள்ள புடவை தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய பிரியந்த குமார கும்பல் ஒன்றினால் மதநிந்தனை குற்றம் சுமத்தப்பட்டு கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இந்நிலையில் முஹமது அத்னன் என்ற அந்த இளைஞன் தனது யூடியுப் பக்கத்தில் விடியோ ஒன்றை பதிவேற்றி இந்த படுகொலையை நியாயப்படுத்தி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த படுகொலை தொடர்பில் வீடியோ ஆதாரங்கள் மற்றும் விசாரணைகள் மூலம் சுமார் 85 பிரதான சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## ஈரானின் ஐ.நா நிலுவையை செலுத்தியது தென்கொரியா



ஈரானின் முடக்கப்பட்ட நிதியில் இருந்து அந்த நாட்டின் ஐ.நாவுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை தென் கொரியா செலுத்திய நிலையில் அந்த நாடு ஐ.நாவில் தனது வாக்குரிமையை மீண்டும் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டிலும் ஈரான் தனது நிலுவை தொகையை செலுத்திய பின்னரே மீண்டும் ஐ.நா வாக்குரிமையை பெற்ற நிலையில் அதனை ஒத்ததாக தற்போதைய அறிவிப்பு உள்ளது.

எனினும் அமெரிக்காவின் தடையினால் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் இந்தக் கொடுப்பனவை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதாக ஈரான் இந்த மாத ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தது.

ஈரானின் முடக்கப்பட்ட நிதியை விடுவிப்பதற்கு அமெரிக்காவின் ஒப்புதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. தென் கொரியாவில் ஈரானின் முடக்கப்பட்ட நிதியின் மூலம் சுமார் 18 மில்லியன் டொலர் ஈரானின் ஐ.நா நிலுவையை செலுத்துவது கடந்த வெள்ளிக்கிழமை பூர்த்தி செய்ததாக தென் கொரியா அறிவித்தது.

## ஓமிக்ரோனின் புதிய மாற்றம்: விஞ்ஞானிகள் கண்காணிப்பு



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபிலிருந்து கண்டறியப்பட்டுள்ள புதிய துணை ரக வைரஸ் திரிபை விஞ்ஞானிகள் உண்ணிப்பாக கண்காணித்து வருகின்றனர். வருங்காலத்தில் அது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி அவர்கள் ஆராய்கின்றனர்.

ஒமிக்ரோனின் புதிய துணை வைரஸ் வேகமாகப் பரவக்கூடியது என்றும் அது ஒமிக்ரோன் போலவே தீவிரமாக இருக்கும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

பி.ஏ.2 எனப்படும் அந்தப் புதிய திரிபு, ஆசியாவில் பரவலாகக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அண்மையில் இந்தியா, பிரிட்டன், டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகளில் பெரும்பாலோருக்கு பி.ஏ.2 பாதிப்பு இருந்ததை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆனால், அந்த திரிபின் மரபணு மாற்றம் குறித்து நிச்சயமற்ற நிலை நீடிப்பதால் அது கவலைக்குரியதாக வகைப்படுத்தப்படவில்லை.

எனினும் புதிய பி.ஏ.2 திரிபு குறித்து உலக நாடுகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 24 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

21 முதல் 25 வரை

சுபஹ் - 05.09
லுஹர் - 12.23
அஸர் - 03.45
மஃரிப் - 06.16
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**



பிலவ வருடம் தை 11

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: சப்தமி
திதி: சப்தமி

**இராசி பலன்கள்**

மேஷம் - பொறுமை
ரிஷபம் - சுகம்
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - செலவு
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பாராட்டு
கும்பம் - மறதி
மீனம் - கோபம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)


மத்திய மலைநாட்டிலுள்ள

# நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவு



### குடிநீருக்கும் பாதிப்பு ஏற்படும் அபாயம்

**ஹற்றன் விசேட நிருபர்**



மத்திய மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையினை தொடர்ந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிக வேகமாக குறைந்து வருகிறது.

காசல்ரி,மவுசாகலை,கெனியோன், லக்ஸபான,நவலக்ஸபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளன.

தேசிய மின் உற்பத்திக்கு பாரிய அளவில் பங்களிப்பு செய்யும் காசல்ரி நீர்த்தேககத்தின் நீர் மட்டம் என்றுமில்லாதவாறு தாழ்ந்துள்ளது. தற்போது சுமார் 15 அடிவரை தாழ்ந்துள்ளதாக மின்சாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் தாழ்ந்து காணப்படுவதனால் நீரில் மூழ்கிகிடந்த கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

நீர் ஓடைகள்,அருவிகளின் நீர் வற்றிக் காணப்படுவதனால் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளன.

நீர்த்தேக்கங்களின் அருகாமையில் 06

# பூஸ்டர் செலுத்தியோர் தொகை 49 இலட்சமானது

### தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு அறிக்கை



நாட்டில் கொரோனா பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 49 இலட்சத்து 16 ஆயிரத்து 430 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று 27,919 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், 12,571 பேருக்கு பைஸர் முதலாம் தடுப்பூசியும் 221 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது.

792 பேருக்கு சைனோபாம் முதலாம் தடுப்பூசியும் 1,795 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்படடுள்ளது.

இரண்டு வருடங்களை மேலதிகமாக

# பெற்றுக் கொள்வதற்கு அரசு எவ்வித கலந்துரையாடலும் செய்யவில்லை

### -அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்



கொவிற் தொற்று காரணமாக எதிர்பார்த்த பணிகளை மேற்கொள்ள முடியாது போனது என கூறி, கடந்து சென்ற இரண்டு வருடங்களை மேலதிகமாக அரசாங்கம் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித கலந்துரையாடலும் நடைபெறவில்லை என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் தெரிவித்தார்.

மக்கள் அரசாங்கத்துக்கு பெற்றுக்கொடுத்த காலம் இன்னும் மூன்று வருடங்கள் உள்ளது எனவும் குறிப்பிட்ட காலத்தில் சுபிட்சத்தின் நோக்கை நிறைவேற்றுவதற்கு முடிந்தளவு அர்ப்பணிப்புடன் செயற்படுவதே அரசாங்கத்தின் இலக்கு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அஸ்கிரிய மஹாநாயக்க அதி வணக்கத்துக்குரிய வரகாகோட ஸ்ரீ ஞானரத்ன தேரரை 22 ம் திகதி சந்தித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு கூறினார்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என அவர் தெரிவித்தார். 06

# பால் மா தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை போதியளவு டொலர்கள் விநியோகம்

### -மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் பால் மா தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்த வித காரணமும் கிடையாது என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

பால்மா இறக்குமதியாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க போதுமான அளவில் டொலர் வினியோகிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதனால் நாட்டில் பால்மா தட்டுப்பாடு ஏற்படுவதற்கான எந்த காரணமும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கான விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் நாட்டில் தற்போது பால் மாவுக்கான தட்டுப்பாடு அதிகமாகியுள்ளது. இத்தகைய நிலையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் அதனை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு போதுமான டொலரை மத்திய வங்கி விடுவிக்க வேண்டுமென்றும் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதற்கிணங்க மத்திய வங்கியினால் போதுமானளவு டொலர்கள் வினியோகிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். (ஸ)

# எரிபொருள் கப்பல் பெப்.09ஆம் திகதியே நாட்டுக்கு வரும்

### - அமைச்சர் உதய கம்மன்பில

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை எதிர்வரும் 27ஆம் திகதி மீள திறக்க முடியாமற் போனால் மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குவதற்கு மேலும் இரண்டு வார காலம் தாமதமாகும் என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்

வெளிநாடுகளில் ஓடர் செய்யப்பட்டுள்ள மசகு எண்ணெய் கப்பல் எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதியளவிலேயே நாட்டை வந்தடையும்.

'மின்சார சபையின் எரிபொருள் கேள்விக்கு தேவையானளவில் மசகு எண்ணெய்யை இறக்குமதி 06

# நாட்டில் மேலும் 75 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி

### Dr.சந்திம ஜீவந்தர தெரிவிப்பு



ஒமிக்ரோன் வைரஸ் தொற்று மேலும் 75 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு, கல உயிரியல் மற்றும் மூலக்கூறு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர இதனை தெரிவித்துள்ளார்.

# 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை: முடிவுகள் விரைவில் வெளியிடப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐந்தாமாண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை விரைவாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத் தாள்களை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி அதற்கான நடவடிக்கைகள் முடிவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

40 பாடசாலைகளில் வினாத் தாள்களைத் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்,விரைவில் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடந்து முடிவடைந்துள்ள நிலையில், அது தொடர்பில் இதுவரை எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

# சீனாவிடமிருந்து அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீனாவிடமிருந்து அரிசி உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் சீன அரசாங்கங்கள் மத்தியில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும்

அதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


சலுகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் சீன அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

நாட்டிற்கு தற்போது முக்கியமாகத் தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை இனங்கண்டு அதனை சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஸ)

# நாட்டில் ஒரு வாரத்தில் 5,391 கொரோனா தொற்றாளர்கள்

### ஏழு நாட்களில் 87 பேர் மரணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில், கடந்த ஒரு வார காலத்தில் 5,391 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த ஒரு வார காலத்தில் 87 கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் மரணமடைந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க நேற்றுவரை நாட்டில் இனங்காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 6,01,048 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர்களில் 5,75, 932 பேர் பூரண சுகமடைந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை,நாட்டில் நேற்றுவரை கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 15, 284 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ)

# இலங்கை பறிமுதல் செய்த படகுகளுக்கு நிவாரணம்

### - தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த125 படகுகளின் உரிமையாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

முதல்வர் மு.க.ஸ்டாலின் (20) ஆம் திகதி தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மீனவ சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்தார். மீனவர்களது அனைத்துக் கோரிக்கைகளின் மீதும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்த முதல்வர், மீனவர்களது கோரிக்கைகள் தொடர்பான கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிட்டார்:

1.இலங்கை அரசினால் பறிமுதல் செய்யப்பட்டு தற்பொழுது இலங்கையில் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள தமிழகத்தைச் சார்ந்த 125 படகுகளின் உரிமையாளர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை காத்திடும் பொருட்டு, 108 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதமும், 17 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதமும், மொத்தம் ரூ.5.66 கோடி வழங்கப்படும்.

2.கடந்த வடகிழக்கு பருவமழைக்காலத்தில் சேதமடைந்த 105 மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு இழப்பீடாக ரூ.5.66 கோடி வழங்கப்படும்.

3.இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களின் விடுதலை குறித்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் முதல்வரிடம் வலியுறுத்தினார்கள். கைது செய்யப்பட்ட மீனவர்களில் மீதமுள்ள மீனவர்களை விடுதலை செய்ய கடிதம் வாயிலாகவும், தொலைபேசி வாயிலாகவும் இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும், எம்.பி.க்கள் மூலம் வலியுறுத்தியதையும் மீனவ சங்க பிரதிநிதிகளுக்கு முதல்வர் விளக்கி கூறினார்.

தேவாலயத்தில் குண்டு வைப்பு:

# பிரதான சூத்திரதாரிகளை இனங்காண உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்

### அமைச்சர் ஜோன்ஸ்டன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேவாலயங்களில் குண்டு வைப்பது தேசிய பாதுகாப்பை சீர்குலைக்கும் செயலென்றும் அது தொடர்பான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் அந்த சம்பவத்தில் பிரதான சூத்திரதாரியை தேடுமாறு இதுவரை எவரும் கோரிக்கை விடுக்கவில்லை என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே வேளை,சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இயல்பாக வெடிப்பதில்லை. அதன் பின்னணியில் சூழ்ச்சிகளை மேற்கொள்வோர் காணப்படுவதாகவும் அவர்களைக் கண்டறிவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்;

ஜனாதிபதி லிட்ரோ காஸ் நிறுவனத் தலைவரை பதவி நீக்கம் செய்யவில்லை.

அந்த வகையில் அது தொடர்பில் ஜனாதிபதியின் மீது குற்றம் சுமத்துவது தவறானதாகும்.

ஜனாதிபதி ஜனநாயக ரீதியில் செயற்படும் ஒரு தலைவராவார். ஜனாதிபதிக்கு தலைவர்களை நியமிப்பதற்கும் பதவி நீக்கம் செய்வதற்கும் முழுமையான அதிகாரம் உள்ளது. அதனால் அவரை எவரும் குறைகூற முடியாது .

ஆரம்பத்திலிருந்தே சமையல் எரிவாயு வெடிப்பது தொடர்பில் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளேன். எனினும் எனது வேண்டுகோளை வைத்து சிலர் இகழ்ச்சியாகப் பேசினர்.

தற்போது தேவாலயங்களில் குண்டுகளை வைக்கின்றார்கள். அது தேசிய பாதுகாப்பை சீர்குலைக்கும் செயலாகும். அதன் பிரதான சூத்திரதாரிகள் யார் என கண்டுபிடிப்பது அவசியம். (ஸ)

உலக வங்கியின் ஒரு பில். டொலர் நிதியுதவியில்:

# 25 மாவட்டங்களில் வாழ்வாதார அபிவிருத்திகள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக கட்டியெழுப்பும் நோக்கில் நாடளாவிய 25 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்காக உலகவங்கி ஒரு பில்லியன் அமெரிக்கன் டொலர் நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

மேற்படி திட்டத்தை அபிவிருத்தியடைந்து வரும் கிராமங்களில் நடைமுறைப்படுத்துவதற்கும் அதன்மூலம் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து பிரஜைகளும் நன்மையடையும் வகையில் பிரதேசம் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு ஊடாக 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| யூரோ | 223.85 | 232.67 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 11ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 20

**குறள் தரும் சிந்தனை**



முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்
தாம் ஆக்கம் பலவுந் தரும்

*வரும்பகையை எதிர்க்கும் வலிமை இருப்பினும், அத்துடன் அரணைச் சார்ந்து போரிடும் வாய்ப்பும் இணையுமானால் பெரும் பயன் கிட்டும்.*

# அரசுசார் நிறுவன ஊழியர்களின் நலன்களிலும் விசேட அக்கறை

கொவிட் 19 தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடி நாட்டின் எல்லா துறைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. இதன் விளைவாகப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட அனைத்து நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான நெருக்கடிகள் மக்களைப் பாதிப்பதைத் தவிர்ப்பதற்காகப் பல்வேறு விதமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இந்நடவடிக்கைகளின் ஊடாக மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டும் மீண்டும் நிரூபித்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்த வகையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் பாரிய நிவாரண பொதித்திட்டம் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் அறிவிக்கப்பட்டது. 920 பில்லியன் ரூபா பெறுமதியான இந்நிவாரணப் பொதித்திட்டம் இவ்வருடத்தின் ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரி மாதம் முதல் மாதாமாதம் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக இந்நாட்டிலுள்ள 14 இலட்சம் அரச ஊழியர்களுக்கு இந்நிவாரணக் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், இந்நிவாரணக் கொடுப்பனவை அரசுசார் நிறுவனங்களாக விளங்கும் கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், நியதிச் சபைகள் உள்ளிட்டவற்றில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார். இச்சுற்றறிக்கையின்படி, அரசுசார் நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 04 இலட்சம் ஊழியர்களுக்கும் ஜனவரி முதல் இக்கொடுப்பனவு கிடைக்க உள்ளதோடு அந்நிறுவனங்களில் கடமையாற்றும் ஒப்பந்த, தற்காலிக ஊழியர்களுக்கும் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தனியார்துறை ஊழியர்களுக்கும் இவ்வாறான கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்குமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இந்நடவடிக்கையின் ஊடாக கொவிட் 19 தொற்று தோற்றுவித்துள்ள பொருளாதார நெருக்கடியினால் நாட்டு மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதில் அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தி இருப்பது மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது நாட்டு மக்களுக்கு பாரியதொரு நிவாரணமும் ஆறுதலுமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசாங்கம் எப்போதும் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்டு வருவதைச் சகலரும் அறிவர். இருந்த போதிலும் இந்நிவாரண நடவடிக்கை தொடர்பில் தவறான பிரசாரத்தை முன்னெடுத்து அற்ப அரசியல் இலாபம் தேட எதிரணியைச் சேர்ந்த சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் இது பாரியதொரு நிவாரணம் என்பதை மக்கள் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இருந்தும் கூட எதிரணியைச் சேர்ந்த சிலரால் இதனை புரிந்து கொள்ள முடியாதிருப்பது வேடிக்கையானதாகும். ஆனாலும் இவர்களது முயற்சியை மக்கள் அறியாதவர்கள் அல்லர். அதனால் அவர்களது முயற்சிகள் மக்கள் மத்தியில் எடுபடப் போவதில்லை.

கொவிட்19 தொற்று தோற்றுவித்திருக்கும் இப்பொருளாதார நெருக்கடிக்கு உலகில் எல்லா நாடுகளுமே முகம் கொடுத்துள்ளன. இது இலங்கைக்கு மாத்திரமுரிய நெருக்கடி அல்ல. அதனால் இந்நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே அரசாங்கம் இந்நிவாரணப் பொதித் திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றது. இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வது அவசியம்.

இதனை விடுத்து இவ்வாறான நிவாரண நடவடிக்கைகளை விமர்சனம் செய்வதன் மூலம் மக்களை மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட எதிர்பார்க்கலாகாது. அது நியாயமான நடவடிக்கையும் அல்ல. அதேநேரம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் இவ்விடயத்தில் மேற்கொள்ளும் முயற்சிகளின் பின்னணியை மக்கள் அறியாதவர்களும் அல்லர். அதனால் இம்முயற்சிகள் மக்களிடையே எவ்விதத்திலும் எடுபடப் போவதில்லை.


ஆகவே கொவிட் 19 தொற்றின் விளைவாக தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு ஆரதவும் ஒத்துழைப்பும நல்கப்பட வேண்டும். அதுவே மக்கள் மீது உண்மையான அன்பு கொண்டவர்களின் பண்பாகும். அவ்வாறான நடவடிக்கைகளே மக்களுக்கு நன்மை பயப்பவையாகவும் அமையும்.

இதைவிடுத்து முழு நாடும் எதிர்கொண்டுள்ள இப்பொருளாதார நெருக்கடியிருந்து மீட்சி பெற முயற்சிப்பதை விடுத்து கட்சி அரசியல் பேதத்தின் ஊடாக அற்ப அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதன் மூலம் நாட்டுக்கோ மக்களுக்கோ எவ்வித நன்மையுமே கிடைக்கப் போவதில்லை.

editor.tkn@lakehouse.lk

# விழுமியம் மிகுந்த எதிர்கால சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு கல்வியே பிரதானம்

கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறியாதவர்கள் அகிலத்தில் மிக அரிது. பொதுவாக அனைத்து நாடுகளிலும் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.சமயங்களும் கல்வி கற்பது ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும கட்டாயக் கடமை என்கின்றது. அந்த வகையில் 2022 ஆம் ஆண்டுக்கான கல்வித் தினத்தில் யுனெஸ்கோவின் கருதுகோளாக 'கல்வியில் புதிய செல்நெறியும் புதிய மாற்றங்களும்' என்ற கருப்பொருள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தக் கருப்பொருளின் நோக்கம் கல்வியில் மறுமலர்ச்சியை வலுப்படுத்துவதும் வரவேற்பதும் ஆகும்.




கொவிட்19 காலகட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகளில் இப்போது நம்பிக்கையின் கதிர் தோன்றியுள்ளது.

கல்வி என்பது தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மக்களின் உள்ளார்ந்த தகுதிகளை வெளியில் கொண்டு வருவது ஆகும். கல்லாதவர்களைக் தாழ்த்தும் வகையில் காலம்காலமாய்ச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் கற்றவர்கள் நிரம்பி விட்ட இக்காலத்தில் கற்காலத்தை விடவும் தீமைகள் பெருகிக் கொண்டு வருகின்றன. குற்றச் செயல்களில் கற்றவர்களும் அதிகமாக ஈடுபடுகின்றார்கள் என்பதுதான் வேதனை. கல்வியினால் மனிதனை நல்வழிப்படுத்த முடியவில்லை என்ற எண்ணமும் தோன்றுகின்றது.

தற்போது கல்வியைக் காசு கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை உள்ளது. அரசும், தனியார் நிறுவனங்களும் கல்வியைத் தாராளமயமாக்கி விட்டதால் கற்றவர்களின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றது. நாட்டின் மிகச் சிறந்த மனித வளமாக, முதுகெலும்பாக இருக்க வேண்டிய இளைய சமுதாயம் எவ்வித நெறிமுறைகளுக்கும் மதபோதனைகளுக்கும் கட்டுப்படாமல் தன்னிச்சையாக மனம் போன போக்கில் வரம்பற்ற சுதந்திரமாகத் திரிய ஆரம்பித்து விட்டதன் விளைவுகளை தற்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். கல்வி அவர்களுக்குத் தேவையான நேரத்தில் கடிவாளமிடத் தவறியதால் தறிகெட்டுப் பாயும் காளைகளைப் போல் இளைய சமுதாயம் சீர்கேடுகளில் சிக்கித் தவிக்க ஆரம்பித்து விட்டது. நெறி கெட்ட கல்வியின் விளைவாகத்தான் உலகில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

தீமைகளை மட்டும் சொல்லி விட்டுச் தீர்வைச் சொல்லாவிட்டால் பயனேதும் இல்லை. இவற்றிலிருந்து மீள்வதற்கான தீர்வுதான் என்ன? சென்று விட்ட சமுதாயத்தைப் பற்றி சிந்தித்துப் பயனில்லை. இனிவரும் இளைய சமுதாயத்தை, வருங்கால சமூகத்தை வளர்த்தெடுக்கின்ற பணிகளை நாம் மேற்கொண்டால் நிச்சயமாக அதுவே நமக்கு மிகவும் நன்மை பயப்பதாக அமையும்.

குழந்தைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் போது அவர்களை என்ன படிக்க வைக்கலாம்? அதற்கென எந்தக் கல்வி நிலையத்தைத் தேர்வு செய்யலாம்? என்பதை மட்டும்தான் எண்ணுகிறோம். ஆனால் எந்தக் கல்வி நிலையம் என்பதைத் தேர்ந்தெடுப்பதுதான் மிகவும் முக்கியமானது. பல மாடிக் கட்டடங்களையும், நுனிநாக்கு ஆங்கிலத்தையும், அதிகமான கல்விக் கட்டணத்தையும் மட்டுமே நல்ல கல்விக் கூடத்துக்கான அளவுகோல்கள் என்று எடுத்துக் கொண்டால் அதுவே நாம் செய்யும் மிகப் பெரிய தவறாகவும் அமைந்து விடலாம். எனவே இன்றை தேவை நெறிசார்ந்த கல்வியாகும். *(Value Based Education)*

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை கல்வி நிலையங்களில் சேர்க்கும் போது அவர்களது எதிர்காலத்தையும் அங்கு அடைக்கலப் பொருளாகக் கொடுக்கிறார்கள். எனவே கல்வி நிலையத்தைத் தேர்வு செய்யும் போது கீழ்க்கண்டவற்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

கல்வி தரமானதாக இருக்க வேண்டும். கல்வியுடன் குழந்தைகளுக்கு நன்னெறி போதனைகளையும், நல்ல பண்புள்ள பழக்கவழக்கங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்தக் கல்வி நிலையங்கள் பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிஞ்சுக் குழந்தைகளின் உள்ளங்களைப் பாதுகாத்து அவர்களை நல்லவர்களாக்குவதற்கான தார்மீகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

ஆகவே, கல்வி என்பது இருளில் ஒளியின் கதிர். இது நிச்சயமாக ஒரு நல்ல வாழ்க்கைக்கான நம்பிக்கை. உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி என்பது அடிப்படை உரிமை. இந்த உரிமையை மறுப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. படிக்காத இளம் தலைமுறையினர் மனிதகுலத்திற்கு மிக மோசமான தலைமுறையினராக மாறுவார்கள்.

புதிய செல்நெறிகளுக்கு உட்பட்டதாக கல்வியைப் பரப்புவதை உறுதி செய்ய வேண்டும்.

சி.அருள்நேசன்
கல்வியியல் பட்டதாரி

# முகக்கவசமும் தடுப்பூசியுமே கொவிட் பாதுகாப்பை தரும்

## 'தங்கத்தாரகை' விருது பெற்ற மருத்துவர் தர்ஷிகா கூறுகிறார்

துரதிர்ஷ்டவசமாக மீண்டும் கொவிட் நம்மத்தியில் தலை தூக்கியிருக்கிறது. தயவு செய்து முகக்கவசம் அணியுங்கள்.மேலும் மூன்று தடுப்பூசிகளையும் ஏற்றிக் கொள்ளுங்கள். இவைதான் கொரோனாவிலிருந்து நம்மைப் பாதுகாக்கும்.

இவ்வாறு 'தங்கத்தாரகை' விருது பெற்ற சாதனை மாணவி மருத்துவர் தர்ஷிகா தணிகாசலம் கூறினார். காரைதீவு பிரதேசசபையின் வருடாந்த தித்திக்கும் தைப்பொங்கல் பெருவிழா தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் பிரதேசசபையில் சிறப்பாக நடைபெற்ற வேளையில், சிறப்புப் பாராட்டுப் பெற்ற மருத்துவர் தர்ஷிகா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பிரதம அதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் தலைமைப் பொறியியலாளர் ஏ.எஸ்.கௌரிபாலன், கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல்.எ. கமல் நெத்மினி, அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரவீந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சாதனை அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு மருத்துவ பீடத்தில் அதிகூடிய 13தங்கப்பதக்கங்களைப் பெற்று முதல்தர மாணவியாக தெரிவு செய்யப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த சாதனை மாணவியும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியஅதிகாரியுமான டொக்டர் தர்ஷிகா தணிகாசலம் பொன்னாடை போர்த்தப்பட்டு 'தங்கத்தாரகை', 'சாதனைச் செல்வி' ,'தங்கமகள்' போன்ற பல விருதுகள் மற்றும் நினைவுச்சின்னங்கள் வழங்கி பாராட்டப்பட்டார்.

காரைதீவு பிரதேசம் சார்பாக பிரதேசசபையால் மாத்திரமன்றி கனடா ஜேர்மனி போன்ற சர்வதேசநாடுகளின் தமிழ் அன்பர்களாலும் இக்கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. டொக்டர் தர்ஷிகாவின் தந்தையா ர் ஓய்வுநிலை அதிபர் பி.தணிகாசலம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அங்கு மருத்துவர் தர்ஷிகா உரையாற்றுகையில் "சமூக மாற்றத்திற்கான கருவி கல்வியே. கல்வியொன்றால் மாத்திரமே மாற்றத்தை அடைய முடியும். எத்தகைய பின்தங்கிய நிலையிலிருந்தும் வளர்ச்சி பெற கல்வியால் மாத்திரமே முடியும். இங்கு காரைதீவில் கல்வியைப் பற்றி பேச வேண்டியதேவையில்லை.எ ன்னை இத்துணை விருது வழங்கி பாராட்டியமைக்கு நன்றிகள்" என்றார்.

பிரதம அதிதியான கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனையின் தலைமைப் பொறியியலாளர் ஏ.எஸ்.கௌரிபாலன் உரையாற்றுகையில் "கலாசாரமில்லாத மக்கள் கூட்டத்தை ஒரு இனமாக அடையாளம் காட்ட முடியாது. எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணும் முனைப்பு



எமது இனத்தில் பலருக்கு இல்லை. ஆனால் தவிசாளர் ஜெயசிறிலுக்கு அது நிறையவே உண்டு.

மனிதனும் தெய்வமாகலாம். அதற்கு முனிவர்கள் பல வழிகளைக் காட்டுகிறார்கள். எமது தங்கப்பெண் எதிர்காலத்தில் ஒரு தெய்வப் பெண்ணாக வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்" என்றார். கௌரவ அதிதியான அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எல்.எ.கமல் நெத்மினி பேசுகையில் "அருமையானதொரு சிறப்பான விழா இதுவாகும். தவிசாளர் ஜெயசிறிலுக்கு பாராட்டுகள். தங்கமகள் தர்ஷிகாவைப் பாராட்டிய பிரதேசசபை தவிசாளர் மற்றும் நிருவாகத்திற்கு பாராட்டுக்கள். இதுவொரு முன்மாதிரியான சமூகத்தின் தேவை. இச்சாதனை சாதாரணமானதல்ல. தங்கமகளை மாவட்ட மட்டத்தில் பாராட்ட நான் திட்டமிட்டுள்ளேன்" என்றார்.

காரைதீவு குறூப் நிருபர்

# வெள்ளிவிழா கண்ட கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகம்

கல்முனை பிரதேசத்தின் பழைமையான விளையாட்டுக் கழகங்களுள் ஒன்றான கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தின் வெள்ளிவிழா சம்மாந்துறையில் அனுஷ்டிக்கப்பட்டது.இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையில் அங்கம் வகிக்கும் இவ்விளையாட்டுக் கழகம், கடின பந்து கிரிக்கட் துறையோடு மட்டும் நின்று விடாது சமூக சேவைகளிலும் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

10 ஆண்டு நிறைவு நிகழ்வினையும், கழக வீரர்கள் மற்றும் நிர்வாகிகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வினையும் கொழும்பு பி.எம்.ஐ.சி.எச். இல் நடத்திய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரேயொரு விளையாட்டுக் கழகம் இதுவாகும்.

வெள்ளிவிழாவை முன்னிட்டு நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும், அங்கத்தவர் ஒன்றுகூடலும் விளையாட்டுக் கழக செயலாளர் பேராசிரியர் எஸ்.எல்.றியாஸ் நெறிப்படுத்தலில் கழகத்தின் தலைவரும், சமாதான ஊடக அமைப்பின் தலைவருமான எம்.எம். ஜெஸ்மின் தலைமையில் சம்மாந்துறை சமாதான கற்கைகள்



நிலைய வளாக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் இந்திக நளீன் ஜயவிக்ரம, செயலாளர் சிதத்லியனராய்ச்சி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். கழகத்தின் தலைவராக மீண்டும் எம்.எம். ஜெஸ்மின், செயலாளராக பேராசிரியர் கலாநிதி எஸ். எல். றியாஸ்,பொருளாளராக எம். எச்.எம்.ஹனீஃப் ஆகியோரும் தவிசாளராக சமீர் யுனூஸ் மற்றும் பிரதித் தவிசாளராகயூ.எல்.எம்.றியாஸ், உப செயலாளராக பஸ்மி காசிம், கலாசார செயலாளராக மௌலவி சபா முஹம்மத்ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் இந்திக நளீன் ஜயவிக்ரம,செயலாளர் சிதத் லியனராய்ச்சி ஆகியோர் கல்முனை ஹோலிபீல்ட் விளையாட்டு கழக நிர்வாகிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

எம்.ஐ.எம். அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# தை அமாவாசை

உலகில் இருந்து பிரிந்த ஒவ்வொரு ஆத்மாவும் வலிவு உள்ளவையே. அதுவே உங்கள் தாத்தா, பாட்டி, முன்னோர்கள் என்றால் அவர்களை நீங்கள் முறையாக வழி பாடும் செய்தால் அவர்களின் அத்தனை சக்தியும் உங்கள் முன்னேற்றத் திற்கு கிடைக்க அவர்கள் முழு ஆசீர்வாதம் செய்வார்கள். உங்கள் ஒவ்வொரு அசைவை யும் அவர்கள் கண்காணித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

நமது முன்னோர்களும், பெற்றோர்களும் ஏற்கனவே இறைவனடி சேர்ந்திருந்தாலும் அவர்கள் அனைவரின் ஆன்மாக்களும் நம்மை எங்கிருந்தோ ஆசீர்வதித்துக் கொண்டிருக்கி றார்கள் என்பது தொடர்ந்து இந்துக்களால் நம்பப்பட்டு வரும் ஐதீகம். நமது முன் னோர் களின் ஆன்மாக்கள் நம்மைச் சுற்றி எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கிறது.

அவர்களை நமது சாதாரணக் கண் கொண்டு அடையாளம் தெரிந்து கொள்ள இயலாது. மேலும் ஒவ்வொருவரையும் தனித்தனியாக வணங்கிட இயலாது. இதனால் தான் அவர்க ளுக்கு ஹோமம் வளர்த்து யாகம் அனுசரித்து பஞ்ச பூதங்களையும் முன்நிறுத்தி உரியமந்தி ரங்களோடு வணங்குகிறோம். இதுவே பித்ரு ஹோமம்.

சிருஷ்டியின் போது இறைவன் ஜீவன்களது ஜீவசக்தி நிறைந்த கும்பத்தை வைத்து சிருஷ் டியை தொடங்குவது போன்று பித்ருக்களின் ஜீவசக்தி அமுதகலசமாக தோன்றும் இடமே சோமாதித்ய மண்டலமாகக் கருதப்படுகிறது.

அமாவாசையன்று சர்வகோடி லோகங்களி லுள்ள மகரிஷிகள் உள்பட அனைத்து தேவ தைகளும் ஜீவன்களும் பூலோகத்திற்கு வந்து புண்ணிய நதிக் கரைகளிலும், கடலோரங்க ளிலும் காசி ராமேஸ்வரம், கயை போன்ற புண்ணிய தலங்களிலும் தர்ப்பண பூஜையை மேற்கொள்கின்றனர் என்பது சாஸ்திரங்கள் நமக்கு உரைத்திடும் உண்மைகள்.

நமது மூதாதையர்களுக்கே உரித்தான இந்தத் தர்ப்பண பூஜையானது பித்ருக்களுக்கு மட்டுமின்றி, வம்சா வளியிலுள்ள நமக்கும் தான் பெரிதும் பயன் தருவதாய் உள்ளது. இதனாலேயே அமாவாசையில் கொடுக்கப்ப டும் பெற்றோருக்கான அல்லது முன்னோருக் கான திதி வழிபாடு மிகவும் சிறப்புடையதாய் விளங்குகிறது.



பொதுவாக வலது ஆள் காட்டி (குரு விரல்) விரலுக்கும், கட்டை விரலுக்கும் (சுக்கிரவி ரல்) இடையிலுள்ள பித்ரு பூம்ய ரேகைகள் வழியாக தர்ப்பணங்கள் அளிக்கப்படுகின் றன.

இந்த தர்ப்பண நீரின் சக்தியானது, பூமியின் ஆகர்ஷன சக்தியை மீறி மேல் நோக்கி எழும்பிச் சென்று, எத்தனையோ கோடி மைல்களுக்கு தொலைவில் உள்ள பித்ரு லோகத்தை அடைகின்றது.

சாதாரணமாக, அமாவாசையன்று கீழிருந்து மேல் செல்வதே பித்ரு லோக அந்தர ஆக்ரஷன சக்தியின் தெய்வீகக் தன்மையாகும். தை அமாவாசையன்று இச்சக்தியானது மிகவும் அபரிதமான தாகப் பெருகுகின்றது. பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யும் போது பசு தயிர் கொண்டு தர்ப்பணம் செய்வது திருப்தியளிப் பதாய் கருதப்படுகிறது.

பித்ரு லோகத்திலுள்ள மூலிகையாய் விளங் குவது புடலங்காயே, இதன் நிழலில் தான் பித்ரு தேவர்கள் இளைப்பாறுவதாய் ஐதீகம். ஆக, அதி அற்புதமான தெய்வீக ஆற்றல்களைக் கொண்ட நமது பித்ருக்களுக்குத் தர்ப்பணங்கள், திவசங்கள், படையல்களை முறையாக அளித்து பல்லாயிரக்க ணக்கான நம் கர்ம வினைகளுக்குப் பரிகாரம் தேடிக் கொள்ளலாம்.




## மானுடவியல்
(தொடர்)

### கணம்புல்ல நாயனார்




வடவெள்ளாற்றுக்குத் தென் கரையில் உள்ள இருக்கு வேளூரிலே, சிவபத்தியிற் சிறந்தவரும் பெருஞ்செல்வ ருமாகிய ஒருவர் இருந்தார். அவர் செல்வம் பெற்றதினால் அடையும் பயன் இதுவே என்று, சிவாலயத்தினுள்ளே திருவிளக்கேற்றித் தோத்திரம் பண்ணுவாராயினார்.

நெடுங்காலஞ்சென்றபின், வறுமை எய்தி, சிதம்பரத்தை அடைந்து சபாநாயக ரைத் தரிசனஞ் செய்துகொண்டு, தம்முடைய வீட்டில் உள்ள பொருள்களை விற்று, அங்குள்ள திருப்புலிச் சர மென்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றி வந்தார்.

இப்படி யொழுகுநாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்து



விட, கணம்புல்லுக்களை அரிந்துகொண்டுவந்து விற்று, நெய் வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனால் அவருக்குக் கணம்புல்ல நாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் தாம் அரிந்து கொண்டு வந்த புல்லு விலைப் படா இருக்க, தம்முடைய பணி தவறாமல் அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம் வரையும் எரித் தற்கு அப்புல்லுப் போதாமையால், அடுத்த விளக்கிலே தம்மு டைய திருமுடியை மடுத்து எரித்தார். அப்பொழுது பரமசிவன் பெருங்கருணை செய்தருள, கணம்புல்லநாயனார் சிவலோகத்தை அடைந்தார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**





உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதையம் மன் ஆலயத்தில் வருடாந்த பிரமோற்சவ உற்சவத்தில் வேட்டைத் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பக்த அடியார்கள் பலர் கலந்து அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

## நாதப் பிரம்ம யோகம் - 03



எப்படி சப்தசுரங்கள் ஏழாக இருக்கி றதோ அப்படியே யோகத்தின் பிரதான பிரிவுகளும் ஏழாகவே இருக்கிறது. இவை இராஜயோகம், ஹதயோகம், பிராணயோகம், சக்தியோகம், ஞானயோ கம், கர்மயோகம், பக்தியோகம் என்பவை யாகும். ஓங்காரம் ஏழு நாதங்களாக எமது சூக்ஷ்ம உடலில் வெளிப்படுவதையே யோக நூல்கள் ஆதாரச் சக்கரங்கள் என்று குறிப் பிடுகிறது. பிரம்மத்தை அறியும் ஆன்ம ஞானம் பிரம்ம வித்யா எனப்படுகிறது. இவற்றின் விளக்கங்களே சப்த லோகங்கள், ஏழு சமுத்திரங்கள், ஏழு மேருக்கள், சப்த தேவதைகள், சப்த தீர்த்தங்கள் என்று கூறப் படுகிறது. இவற்றை அடையும் வழிகள் சப்த சாதனைகளாகவும், இவற்றை வெளிப்படுத் தியவர்களை சப்த ரிஷிகள் எனவும் கூறுகி றோம்.

யோக நூற்கள் இடகலை, பிங்கலை நாடிகளில் பிராணனின் ஊர்த்துவமுக மேல் நோக்கிய அசைவினைப் பற்றியும், அதோமுக கீழ் நோக்கிய அசைவைப் பற் றியும் கூறுகின்றன. இப்படி பிராணன் அசையும் போது ஓங்காரத்திலிருந்து வெளிப்படும் நாதமாக சுழுமுனை நாடி எனும் முண்ணாணிலிருந்து சப்த சுரங்கள் வெளிப்படுகிறது. இவை நாக வடிவான குண்டலினி சக்தியின் ஏழு நாக்குகளி லிருந்து வெளிப்படும் சப்தம் எனயோக நூற்கள் கூறுகின்றன. இந்த ஏழு நாதங்க ளும் மனிதனில் பிராணனின் மிகச் சூக்ஷ் மமான நிலையில் பிராணனை தட்டி எழுப் புகிறது. இதன் மூலம் யோகியானவன் ஏழு சுரங்களின் மூலம் தனது உணர்வின் மிக நுண்ணிய தளத்தைத் தொடர்பு கொண்டு அதீத ஆற்றல்களையும், இயற்கையைக் கட்டுப்படுத்தும் அதீத சக்திகளையும் பெறு கிறான்.

எமது உடலிலுள்ள பிராண ஓட்டம் மூச் சினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதைப் பற்றிய ஞானம் ஸ்வர சாத்திரம் எனப்படும். இது மூச்சினுடைய லயம் பற்றிய புராதன விஞ்ஞானமாகும். இது யோகத்தில் மிக முக் கியமான ஒரு சாதனையாகும். ஸ்வரயோகத் தின் அடிப்படை மனித உடலில் ஓடும் சூரிய சந்திர நாடிகளின் பிராண ஓட்டத்தை வலது இடது மூக்கில் ஓடும் மூச்சின் மூலம் கட்டுப் படுத்தி எப்படி யோக சித்தி பெறுவது என்ற சாத்திரமே ஸ்வர யோகமாகும்.

இயற்கையில் உள்ள ஒவ்வொரு செயலும் ஒருவித வட்டச் சுழற்சியிலேயே நடைபெறுகி றது. சிறிய பூச்சிகள், விலங்குகள், பறவை கள் இவற்றின் சப்தங்கள், அசைவுகள் கூட ஒருவித தாளத்துடனேயே இருக்கிறது. அதி காலையில் கூவும் சேவல்கள், பறவைகளின் ஒலிகளில் இவற்றைக் காணலாம். மயில், குயில், குருவிகளின் ஒலியில் ஒருவித மெல் லிசையை நாம் உணர முடியும். அதுபோல் நாயின் குரைப்பு, சிங்கத்தின் உறுமல்,ஆட் டின் கனைப்பு ஆகியவற்றிலும் ஒரு வித ஒத் திசைவான சுரத்தினைக் காணலாம். இரவுச் சில் வண்டுகளின் சப்தமும் எமக்கு இப்படிப் பரீட்சயமான ஒன்றே. **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

*18840)* வெற்றிலை என்று ஏன் பெயர் வந்தது?

**எல்லாக் கொடிகளும் பூ விடும், காய் காய்க்கும், ஆனால் வெற்றி லைக் கொடி பூக்காது, காய்க்காது, உட்கொள்ளக்கூடிய வெறும் இலை மட்டும்தான் விடும். அதனால் அது வெற்று இலை ஆயிற்று.**

*18841)* “சித்தர்” என்ற சொல் லுக்கு என்ன பொருள்?

**சித்தி பெற்றவர்**

*18842)* யோகாங்கம் எத்தனை ?

**எட்டு**

*18843)* எட்டு யோகாங்கமும் எவை?

**இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி**

*18844)* எட்டு வகையான யோகாங்கம் மூலம் எண் பெருஞ் சித்திகளை பெற்றவர்கள் யார்?

**சித்தர்கள்**

*18845)* நாம் தினந்தோறும் நிமி ஷத்திற்கு எத்தனை மூச்சுகள் வீதம் மூச்சு விடுகிறோம்?

**பதினைந்து**

*18846)* நாம் எதன் வழியாக சுவா சித்துக்கொண்டிருப்போம்?

**மூக்கின் வலது துவாரம் வழி** யாகவும் இடது துவாரம் வழியா கவும்

*18847)* உள்ளுக்கு இழுக்கும் மூச் சுக்கு என்ன பெயர்?

**நிஸ்வாஸம்**

*18848)* நிஸ்வாஸம் என்றதுக்கு வேறு பெயர் உண்டா?

**ஆம். பூரகம்**

*18849)* வெளிவிடும் மூச்சுக்கு என்ன பெயர்? **உஸ்வாஸம்**

*18850)* உஸ்வாஸம் என்றதுக்கு வேறு பெயர் உண்டா?

**ஆம். ரேசகம்**

*18851)* மூச்சைக் கட்டுதல் அல்லது மூச்சை அசைவற நிறுத் துதலை என்னவென்று சொல்லு வார்கள்? **கும்பகம்**

*18852)* பூரகம், ரேசகம் என்னும் மூச்சுகள் இரண்டையும் எதனால் நிறுத்தி வைக்க முடியும்?

**யோக வலிமையால்**

*18853)* இவ்வாறு நிறுத்தி வைத்தால் என்ன நடக்கும்?

**அவருக்கு மனம் புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவற்றின் விகா ரங்கள் ஒடுங்கிவிடும்.**

*18854)* இவ்வாறு இருப்பதை என்வென்று அழைப்பார்கள்?

**லயம்**

*18855)* இந்தலயம் யாருக்கு ஏற்ப டும்? **யோகாப்பியாச சித்தி பெற் றவர்களுக்கு மட்டுமே.**


*18856)* நாம் மூச்சு வாங்கி விடும் நிஸ்வாஸ உஸ்வாஸங்களுக்கு என்ன பெயர்?

**ஹம்ஸ**

# குங்கும பொட்டின் மங்களம்

குங்குமம், லட்சுமி கடாட்சம் மிக்கது. பெண்கள் குங்குமம் இடுவதால் மகாலட்சுமியின் நீங்காதஅருளைப் பெறுகிறார்கள். குங் குமத்தை மோதிர விரலால் தான் இட வேண்டும். சிவப்பு நிற குங்குமமே புனி தமானது.





சுமங்கலிப்பெண்களின் தலை வகிட் டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார் கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர்களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.

சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீமகாலட்சுமியின் இருப் பிடம், சுமங்கலிகளின் சக்தி குங்குமத் தில் உள்ளது.வீட்டிற்கு வரும் சுமங்கலி களுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறுபவர் இருவருக்கும் மாங்கல்யத் தின் பலத்தைப் பெருக்கும்.

பெண்கள் குங்குமத்தை, தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

திருமணமான பெண்கள் நெற்றி நடுவிலும், வகிட்டின் தொடக் கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பு.ஆண்கள் இருபுருவங் களையும் இணைத்தாற் போல் குங்குமம் அணிவது தன்னம்பிக் கையை அதிகரிக்கும்.

கட்டைவிரலால் குங்குமம் இட்டுக் கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும்.

குருவிரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னணித் தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்ற வற்றை ஊக்குவிக்கும்.

சனிவிரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக் கொள்வது தீர்காயுளைக் கொடுக் கும். குங்குமம் அணிவது தெய்வீக தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டிற்கு நல்லது.

மங்களம் தரும் குங்குமத்தை அணிந்து, இன்னும் மங்களகரமாக இருக்க, உங்கள் வீட்டு இளந்தளிர்களுக்கு இந்த நல்ல நாளில் ஆரம்பித்து படிப்படியாக சொல்லி கொடுங்கள்.







கண்டி கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெல்தோட்டை நாராங்கென்ன தமிழ் வித்தியாலயத்தில் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது. (படங்கள்: தெல்தோட்டை தினகரன் நிருபர்)

# இழப்பீடு, நெல்லின் விலை குறித்து அமைச்சரவையில் முடிவெடுக்கப்படும்

## விவசாய அமைச்சர் மஹிந்தானந்த

எம்.ஏ.அமீனுல்லா

பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான இழப்பீடு மற்றும் நெல்லின் விலை என்பன குறித்து, இந்த வாரம் அமைச்சரவையில் முடிவெடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

பசுமை விவசாயம் குறித்து கவனம் செலுத்துவதுடன் அதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் சிறு போக பருவத்தில் விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் சில வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (22) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அமைச்சர்.

கடந்த பெரும் போகத்தில் பசுமை விவசாயத்திற்கு செல்ல அரசு முடிவு செய்தது. இந்த போகத்திலும் பல குறைபாடுகள் இருந்தன. .விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரம் வழங்க முடியவில்லை. இந்த குறைபாடுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒப்புக்கொள்கிறோம். வரவிருக்கும் சிறுபோகத்தில் அனைத்து குறைபாடுகளையும் நீக்கி விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரங்கள் வழங்கப்படும். விவசாயிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிரமப்படக்கூடாது எனவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்முறை நெல் உற்பத்தி குறைந்துள்ளது. மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் நெல் உற்பத்தியில் ஏற்படும் வீழ்ச்சி ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளது.

# சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோருக்கு தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும்

## சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர

அக்குறணை குறூப் நிருபர்

நாட்டில் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோர் சாதாரண பாமர மக்கள் அன்றி ஏதோ ஒரு அடிப்படையில் பலம் பொருந்தியவர்களாக உள்ளனர்.

எனவே சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவோர் எத்தகைய தராதரம் கொண்டவர்களாக இருப்பினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்படும் என சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று கண்டி ஒக்ரேய் ரியேஜன்ஸி ஓட்டலில் இடம் பெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட ஊடக வியலாளர்களுக்கு நில அதிர்வு தொடர்பாக ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்விலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

பணபலம் அல்லது அரசியல் பலம் பொருந்தியவர்களே அதிகமாக சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களில் ஈடுபடுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் சில விடயங்களை அவதானிக்கும் போது அதில் சில உண்மைகள் இருப்பதுவும் தெரிய வந்துள்ளது.

இந்த நாட்டில் சகல மக்களும் சுற்றாடலை நேசிக்கும் நிலை ஏற்படும் வரை சுற்றாடலைப் பாதுகாப்பது என்பது பாரிய சவாலாகவே இருக்கும்.

மரம் நடுவது அல்லது மரத்தை வெட்டவது மட்டும் தான் சுற்றாடலுடன் தொடர்பு பட்ட விடயம் என சிலர் நினைக்கின்றனர். இது தவறாகும்,

அதேபோல் நாட்டில் பாவிக்கப்படும் பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் பொருட்களில் 7 சதவீதம் மட்டுமே மீள் சுழற்சி செய்யப்படுகிறது. ஏனைய 93 சதவீதமானவைகளுக்கும் என்ன நடக்கிறது என்பது புதிராக உள்ளது.

அதிகமானவர்கள் நாம் அவற்றை எரித்து விடுகிறோம் என்கின்றனர். இது சுற்றாடலுக்கு மேலும் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

எனவே இதற்கு மாற்று வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். கண்டி நகருக்குள் வரும் வாகன எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது மாற்றுப் பாதைகளை அமைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நெற்செய்கை...

விவசாயிகளுக்கு நிதியுதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி, விவசாய அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## நீராடச் சென்ற இரு...

அண்மித்த கடற் பகுதியில் நேற்று 21 வயது யுவதி ஒருவர் உட்பட நான்கு பேர் கடலில் நீராடச் சென்றுள்ள நிலையில் 12 மற்றும் 15 வயதுடைய இரு சிறுமிகளே நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவர்கள் நால்வரும் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் 21 வயது யுவதி மற்றும் 14 வயது சிறுமி ஆகிய இருவரும் காப்பாற்றப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்படி நால்வரும் வெலிகம முஹுதுகம பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்றும் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ள 12 வயது மற்றும் 15 வயது ஆகிய இரு சிறுமிகளையும் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## சுகாதார வழிமுறைகளை...

மூன்றாவது தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவே மாற்று வழியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சிறுவர்கள் மத்தியில் தொற்றுக்கள் அதிகரித்து வருவதாக ரிஜ்வே வைத்தியசாலையின் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றைய நிலவரப்படி 40 சிறுவர்கள் வைத்தியசாலையில் கொரோனா தொற்றுடன் அனுமதிக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதில் எத்தனைப்பேர் ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விடயம் இன்னும் வெளியாகவில்லை.

இதனையடுத்து இலங்கையில் இதுவரை ஒமிக்ரோனால், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 283ஆக உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழர் விடுதலைக்....

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுக்குழு, மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பாரம்பரியமிக்க கட்சி. இதனை பொய்களை வாரி வழங்கும் ஒரு குழுவினர் தந்திரமாக அபகரிக்கத் திட்டமிட்டு என்மேல் அவதூறு சொல்லி என்னை அவமானப்படுத்தி கட்சி ஆவணங்களையும், அலுவலகத்தையும் அபகரிக்கத் திட்டமிட்டதோடல்லாமல் இன்று நடவடிக்கைக் குழுவைக் கூட்ட இருப்பதாகவும் (29) ஆம் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் நியமனங்களை வழங்க இருப்பதாகவும் அறிகிறேன். இதில் கலந்துகொள்வது சட்டவிரோதமான செயலாகும். ஆதலால் தயவு செய்து சட்டவிரோதமான இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாதீர்கள்.

இந்த மோசடிக்காரர்களுக்கெதிராக எனது சட்டத்தரணி மூலம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் இந்த மோசடிக்காரர்களை மக்கள் நம்மவேண்டாம், அவர்களுடன் எவ்வித தொடர்பும் வைக்க வேண்டாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனைத்து ஆதரவாளர்களையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசியலமைப்பை...

இந்த வரைபில் அரசியல் கட்சிகளினால் முன்மொழியப்பட்ட விடயங்கள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் உள்ளடக்கத்தில் உள்ளதாக அறிய முடிகின்றது.

குறித்த வரைவின் சில உள்ளடக்கங்கள் தொடர்பில் வரைவைத் தயாரிக்கும் உறுப்பினர்கள் மத்தியில் இணக்கப்பாடு காணப்படாத போதும் அவையும் உள்ளீர்க்கப்பட்டு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் குறித்த வரைவினை நிபுணர்கள் குழு வழங்குவதற்கு திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இது வரையில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான நேர ஒதுக்கீடுகள் எவையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதேநேரம், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஏப்ரலில் புதிய அரசியலமைப்புக்கான வரைவு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விக்டோரியா நீர்த்தேக்க...

பிரதேசங்களில் இன்றும் வரட்சியான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், குருநாகல், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளிலும், காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு கோடி ரூபா நகைகளுடன்...

599 கிராம் 404 மில்லிகிராம் எடையுள்ள 6 தங்க மோதிரங்களும் 200 கிராம் 44 மில்லிகிராம் எடையுள்ள தங்க சங்கிலியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மின்சாரத்தை மீதப்படுத்த ...

அதற்கிணங்க மாலை 6.30 மணி முதல் இரவு 11 மணிவரை வீதி விளக்குகளை அணைத்துவிட்டு 11 மணிக்குப் பிறகு மீண்டும் அதனை ஒளியூட்டச் செய்யவும் அல்லது மாலை 6.30 மணி முதல் இரவு 10 மணி வரைக்குமாவது அந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு யோசனையொன்றை முன்வைக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## கொவிட்19 தொற்றாளர்...

இனம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் நிலைமையை இலகுவாகக் கொள்ளாமல் பாரதூரமாக அதனை நோக்க வேண்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள இராஜாங்க அமைச்சர், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள் மிகுந்த அவதானத்தடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதே வேளை,கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தற்போது 42 சிறுவர்கள் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களாக சிகிச்சை பெற்று வருவதாகவும் சிறுவர்கள் மத்தியில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதாகவும் அந்த ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார். (ஸ)

## IMF இடம் செல்வதே....

என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் எம்பி:

நாட்டில் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள நிலைமையை எடுத்துக்கூறி அதிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி தமது கொள்கை விளக்கவுரையில் தெரிவித்திருக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியடைந்து குறைபாடு, தட்டுப்பாடு என மிக மோசமான வங்குரோத்து நிலையை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.அரசாங்கம் மேற்கொண்டுள்ள எந்த தீர்மானமும் இலக்கு இல்லாததாகவும் அடிப்படையற்றதாகவும் அமைந்துள்ளது.

அதன் காரணமாகவே நாடு இந்தளவு பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

## அரசியல் தீர்வு...

ஜனாதிபதியின் பேச்சு முன்னெடுக்கப்படுமா என்று நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவிடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

திறந்த மனதுடன் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. அந்தப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படும்.

எனவே, முதலில் அத்தியாவசிய தேவைகளுக்கு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் திட்டமாக உள்ளது. இவற்றுக்கு முதலில் தீர்வு கண்டால் அரசியல் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காணமுடியும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்தி இனவாத ரீதியில் செயற்பட அவர்கள் முற்படக்கூடாது. நாட்டை முன்நகர்த்தும் செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பரீட்சை சான்றிதழ் வழங்கும் ஒரு நாள் சேவை தற்காலிக இடை நிறுத்தம்

பரீட்சை சான்றிதழ் வழங்கும் ஒரு நாள் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று முதல் அமுலாகும் வகையில் ஒரு நாள் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சைக்கு அதிகளவான பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவதனால் ஒருநாள் சேவையை இடைநிறுத்த வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை சான்றிதழை பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேவையின் அடிப்படையில் வெளிவிவகார அமைச்சு அல்லது விரைவு தபால் மூலம் விண்ணப்பதாரிக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.





அப்புத்தளை பிடத்மலை தோட்டம் மேற்பிரிவில் பதுளை பாலச்சந்திரன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பாரம்பரிய கலை கலாசாரங்களை ஊக்குவிக்கும் வண்ணமாக இடம் பெற்ற தைப்பொங்கல் விழா நிகழ்வில்...

## என்னை கைது செய்யவோ...

அது தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் தாம் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் இடம்பெற்றிருந்தாலும் நான் குற்றவாளி அல்ல.

என்னைக் கைது செய்து சிறையில் அடைக்கப் போவதாக வெளிவரும் செய்திகளில் உண்மை கிடையாது .

அவ்வாறு என்னை சிறையில் அடைப்பதற்கு போதுமான சாட்சிகளோ அல்லது விடயங்களோ கிடையாது.

அவ்வாறு வெளியிடப்படும் தகவல்கள் பொய்யானவை.

அதேவேளை தான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தம்மால் கையொப்பமிடப்பட்ட சில வர்த்தமானி அறிவித்தல்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வர்த்தமானியில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு 65 வர்த்தமானி அறிவித்தல்களில் தாம் கையொப்பமிட்டு உள்ளதாகவும் அதன்பிறகு மூன்று மாதத்திற்குப் பின்னரே தாம் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## எதிர்வரும் வெள்ளிக்கிழமை...

எவ்வாறான காலத்தில் மின்துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்பது தொடர்பில் இன்றைய தினம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுமென சபையின் பதில் பொது முகாமையாளர் கலாநிதி சுசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மசகு எண்ணெய் தீர்ந்து போயுள்ளதால் நேற்றைய தினம் முதல் சபுகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் முழுமையாக சீர்குலைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்தை மின் உற்பத்தி நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்த எரிபொருள் நேற்று முன்தினம் மதியம் வரையும் போதுமானதாக இருந்துள்ள நிலையில் அதனையடுத்து பெற்றொலியக் கூட்டுத்தாபனம் 600 மெற்றிக் தொன் மசகு எண்ணெய்யை மின்சார சபைக்கு வழங்கியது.

சபுகஸ்கந்த மின் உற்பத்தி சீர்குலைவு காரணமாக 108 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் இணைப்புக்கு கிடைக்கவில்லை.

வார இறுதி நாட்களில் மின் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும் நாளை செவ்வாய்க்கிழமை முதல் மின் துண்டிப்பை மேற்கொள்ள நேரிடும் என்றும் பெரும்பாலும் இரவு நேரத்திலேயே மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## நீர்த்தேக்கங்களின் நீர்... (03ஆம் பக்கத் தொடர்)

உள்ள பற்றைக்காடுகளுக்கு விசமிகள் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும், பொழுது போக்குக்காகவும் தீ வைப்பதனால் நீரூற்றுக்கள் அற்றுப்போய் பாரிய குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றன.

எனவே காடுகளுக்கு தீ மூட்டுவதனை உடன் நிறுத்துமாறு பொது மக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக இந்த வரட்சியான காலநிலை காணப்படும் பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

## பெற்றுக் கொள்வதற்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்துக்கு இன்னும் மூன்று வருடங்கள் உள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எமக்கு உள்ளது .மேலதிகமாக மூன்று ஆசனங்களை வைத்துக்கொண்டு சிலர் ஆறு வருடங்கள் ஆட்சியைக் கொண்டு சென்றார்கள். அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைவரும் அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் தொடர்பாக இணைந்து செயல்பட வேண்டும்.அதுவே அடிப்படை சித்தாந்தம்.

## கப்பல் பெப்.09 திகதியே ... (03ஆம் பக்கத் தொடர்)

செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான ஓடர்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## நாட்டில் மேலும் 75... (03ஆம் பக்கத் தொடர்)

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஸ)

# வனப்பகுதிகளுக்கு விஷமிகள் தீ வைப்பு

குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்




**ஹற்றன் விஷேட நிருபர்**

வட்டவளை பகுதியில் இருவேறு வனப்பகுதிக்கு இனந்தெரியாதோர்,தீ வைத்ததால் அங்குள்ள சுமார் 190 குடும்பங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை இன்சரா பிரிவு மற்றும் நீர்ப்போசன வனங்களுக்கே, விஷமிகள் தீவைத்துள்ளனர்.

இன்சாரா பிரிவிலுள்ள சுமார் 200 ஏக்கர் பைனஸ் காட்டுப்பகுதிக்கு (22) விஷமிகள் தீ வைத்ததால், ஆறு ஏக்கர் காடுகள் தீக்கிரையாகின.இதனால்,இந்த

வனப்பிரதேசத்தின் கீழ்பகுதியிலுள்ள இலக்கம்101 வீடமைப்பு திட்டத்திலுள்ள 60 குடும்பங்களுக்கு நீரை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும், வட்டவளை பகுதியிலுள்ள நீர்ப்பாசன பிரதேசத்திற்கும் தீ வைக்கப்பட்டதால் சுமார் ஐந்து ஏக்கர் காடு எரிந்துள்ளது. இதனால், இங்குள்ள 130 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதிலும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

மலையகத்தில் தற்போது வரட்சியான காலநிலை நிலவுவதால், காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், வெயில், காற்றுக்காரணமாக வனப்பிரதேசங்களில் தீ வேகமாகப்பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நீரூற்றுக்கள் வற்றி, குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இந் நிலைமைகள் பிரதேசத்திலுள்ள அரியவகை தாவரங்கள் மருந்து மூலிகைகள், வன விலங்குகள் போன்றவற்றை அழித்தும் வருகின்றன.

# இரசாயனப் பசளைகளில் ஹிந்திமொழி வாசகங்கள், விவசாயிகள் குழப்பம்

**தம்புள்ள தினகரன் நிருபர்**

கிருமி நாசினிகள் மற்றும் இரசாயனப்பசளைகள் தற்போது சந்தைக்கு வந்துள்ள நிலையில், அவற்றில் ஹிந்திமொழி பொறிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் குழப்பமடைவதாக விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் மாவட்ட செயலாளர் திருமதி தேஜானி திலக்கரத்ன தலைமையில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தின் போதே, இதுபற்றித் தெரிவிக்கப்பட்டது.

தம்புள்ள மடாட்டுகம ஒருங்கிணைந்த விவசாய அமைப்பின் தலைவர் டி.எம்.கே.பி.திஸாநாயக்க இதுபற்றித் தெரிவித்ததாவது,.

நாட்டில், தற்போது இரசாயன பசளை வகைகள் விற்பனைக்கு வந்துள்ளன. யூரியா பசளைகள் அதிக விலைக்கு விற்பனையாகின்றன. ஐம்பது கிலோ கிராம் நிறையுடைய யூரியாப் பசளைப்பக்கற் ஒன்று இருபத்தையாயிரம் ரூபாவிற்கு (25,000/) விற்பனை செய்யப்படுகின்றது. ஏனைய இரசாயனப்பசளைகளின் விலைகளும் இவ்வாறு உயர்ந்துள்ளன.

எனினும்,இந்தப் பசளைப்பக்கற்றுக்களில் ஹிந்திமொழியில் எழுதப்பட்டுள்ளமை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

நுகர்வோர் அதிகார சபைச் சட்டம் மற்றும் கிருமி நாசினி பதிவாளர் ஆகியோரின் கட்டளையின் பிரகாரம், கிருமி நாசினி மற்றும் களை நாசினி உள்ளிட்ட இரசாயனப் பொருட்களின் விபரங்கள் மூன்று மொழிகளிலும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.எனினும்,தற்போது வந்துள்ள இந்த இரசாயனப்பசளைகளில்,ஹிந்தி மொழி பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தம்புள்ள சந்தைகளில் விற்பனையாகும் ஹிந்தி மொழி விளக்கத்துடன் காணப்படும் இந்த இரசாயன பொருட்கள் தொடர்பில், எவ்வித விளக்கமும் பெற முடியாதுள்ளது என்றும் அவர் கூறினார்.

உழவு இயந்திர வாடகை, தொழிலாளர் கூலி என்பன அதிகரித்துள்ளதால், அரசாங்கமும் அரசியல்வாதிகளும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது நல்லது எனவும் அவர் தெரிவித்தார்.

## சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்ற பெண் குளிரால் உயிரிழப்பு

சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்ற பெண், கடும் குளிரால் சுகவீனமடைந்து பின்னர்,உயிரிழந்தார். சிவனொளி பாதமலை ஏறிய இப்பெண், சியத்தல கங்குல பகுதியில் வைத்து கடும் குளிர் காரணமாக சுகவீனம் அடைந்தார். இதையடுத்து நல்லதண்ணி நகரிலுள்ள அவசர அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இப்பெண்ணுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. பின்னர் சிகிச்சைப்பலனின்றி இப்பெண் உயிரிழந்தார். மினுவாங்கொடையைச் சேர்ந்த 49 வயதுடைய சமாரா மாலதி என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.




தைப்பொங்கல் விழா, நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டதுடன் தேசிய நிகழ்வாகவும் கொண்டாடப்பட்டது. இதற்கிணங்க கொழும்பு ரோயல் கல்லூரியிலும் பொங்கல்விழா கொண்டாடப்பட்டது. இதில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை படங்களில் காணலாம்.

# இலவச ஊடக செயலமர்வு

மாவனல்லை ஜே.எம். மீடியா ஊடக நிறுவனம் மற்றும் ஜே.எம். மீடியா ஊடகக் கல்லூரி இணைந்து ஏழாவது வருடமாகவும் ஏற்பாடு செய்திருக்கும் இலவச ஒரு நாள் ஊடகச் செயலமர்வு, இம்மாதம் (30) ஞாயிற்றுக்கிழமை

காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை கண்டி ஈ.எல் சேனாநாயக்க கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் ஊடகர்கள், மாணவர்கள், ஊடக அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றவர்கள், ஊடக ஆர்வலர்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் செய்தி இணையங்களை செயற்படுத்துவோர் அனைவரும் இதில் பங்குபற்ற முடியும்.கலந்துகொண்டோருக்கு சான்றிதழ் வழங்கும் இந்நிகழ்வில்,வயதெல்லை மட்டுப்படுத்தப்படவில்லை

நேரடியாக நடைபெறும் இச்செயலமர்வை, சூம் ஊடாகவும் ஒளிபரப்புவதற்கான இணைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பதிவுகளுக்கு MT22 (பெயர், ஊர்) என்பவற்றை 0777 128 348 வாட்ஸ் அப் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## எதிர்காலத் திட்டங்களை ஸ்ரீல.சு.க. புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கும்

**மினுவாங்கொடை நிருபர்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முகவரி தொலைந்து விட்டதாகவும், இனிமேல் இக்கட்சிக்கு எதிர்காலமே இல்லையென்றும் கூறும் சிலருக்கு இன்னும் சில தினங்களில் கட்சியின் எழுச்சி தெரியவருமென

முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

ஸ்ரீல.சு.க. மத்திய கொழும்பு கிளைக் காரியாலயம், அண்மையில், மருதானையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழிந்துவிட்டதாக சிலர், மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதன் முகவரி இன்னும் தொலையவில்லை. அதே முகவரியில் புதுப் பொலிவுடன் கட்சி எழுச்சியடையும். எதிர்காலத் திட்டங்களை பாரியளவில் முன்னெடுத்துச் செல்லும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. கொழும்பு வாழ் மக்கள் இதை, ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்று மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். குறிப்பாக, குடிசைகளில் உள்ள கொழும்பு வாழ்மக்கள், பாரிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலமையை மாற்றியமைக்கவே ஸ்ரீல.சு.க. களத்தில் இறங்கியுள்ளது.

# தேசிய தாவரவியல் பூங்கா இணையத்தளம் அங்குரார்ப்பணம்



**எம்.ஏ.அமீனுல்லா**

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பேராதனை தாவரவியல் பூங்காவிற்கு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளில் ஒரு அங்கமாக இந்த இணையத்தளம் திறக்கப்பட்டதாக,திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஷெலோமி கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி www.botanicgardens.gov.lk என்பதாகும்.

கவர்ச்சிகரமான இவ்விணையத்தளத்தில் நாட்டிலுள்ள தாவரவியல் பூங்காக்கள் தொடர்பான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பூங்காக்களை நாடும் பார்வையாளர்கள், இதனுடாக சகல விபரங்களையும் முறையாக பெற்றுக் கொள்ள முடியும்.

இது சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் அடித்தளமிடும் என திருமதி ஷெலோமி கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

# மலையகத்தில் பனிப் பொழிவு அவதானமாக பயணிக்குமாறு எச்சரிக்கை

**ஊவா சுழற்சி நிருபர்**

மலையகத்தில் பனிப் பொழிவதால், வீதியில் மிக அவதானமாகப் பயணிக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அண்மைக்காலமாக மலையகத்தில் பனிப் பொழிவதால், வீதிகள் எங்கும் பனி மூட்டம் காணப்படுகின்றன. இதனால் வீதியில் சறுக்கும் தன்மை அதிகரித்துள்ளது.இந்நிலைமை விபத்துக்ளையும் ஏற்படுத்தலாமென போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பதுளை மாவட்டத்தில் எல்ல வெல்லவாய வீதியின் ராவணா எல்ல பகுதி, பதுளை மஹியங்கணை கண்டி வீதியின் ரந்தெனிய பகுதி,வெலிமடை நுவரெலியா வீதியின் ரோந்தபொல பகுதி,ஹப்புத்தளை கொழும்பு வீதியின் பெறகல பகுதி போன்ற இடங்களிலேயே, பனி மூட்டங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே, இப்பிரதேசமூடாக வாகனங்களில் பயணிப்போர், விஷேடமாக வாகன ஓட்டுநர்கள் வாகனங்களை மிகவும் அவதானமாக செலுத்துமாறும், தேவை ஏற்படின் பச்சை நிற மின்குமிழ்களை பயன்படுத்துமாறும் போக்கு வரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

திகதி 21.01.2022 — வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4654 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,170,370.00
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 8 3 4 3 2 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,861,836.00

கொவிசெத (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2949 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,305,100.00
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 07 34 47 72 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,015,823.60

மெகா பவர் (Mega Power) கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 1002 — மெகா அதிர்ஷ்ட இலக்கம் 08317
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,073,460.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 175,627,350.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: F — சுப்பர் இலக்கம்: 04 — வெற்றி இலக்கங்கள்: 35 55 60 76

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 684 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,924,720.00
ஆங்கில எழுத்து: J — வெற்றி இலக்கங்கள்: 02 10 20 61 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,523,426.40

செவன — சீட்டிழுப்பு இலக்கம் : 346 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,253,140.00
ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 05 13 40 82 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,236,348.80

வாசனா சம்பத (Vasana Sampatha) — சீட்டிழுப்பு இலக்கம் :1686 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,467,340.00
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 81 88 92 93 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,250,066.70

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416

திகதி 22.01.2022 — சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4655 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,606,870.00
ஆங்கில எழுத்து: W — வெற்றி இலக்கங்கள்: 4 6 8 0 7 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,861,836.00

கொவிசெத (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2950 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,233,800.00
ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 45 48 56 74 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,174,946.40

மெகா பவர் (Mega Power) கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 1003 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,932,880.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ 178,350,354.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 12717
ஆங்கில எழுத்து: V — சுப்பர் இலக்கம்: 24 — வெற்றி இலக்கங்கள்: 02 36 51 67

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 685 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,834,100.00
ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 08 33 54 66 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,523,426.40

ஜாதிக சம்பத (Jathika Sampatha) — சீட்டிழுப்பு இலக்கம் : 1201 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,912,120.00
வெற்றி இலக்கினம்: மீனம் — வெற்றி இலக்கங்கள்: 0 1 3 4 3 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,816,542.40

சீட்டிழுப்பு இலக்கம் 347 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,194,740.00
ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 18 45 49 88 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,249,738.40

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01 — தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 — பெக்ஸ்: 0114 669 416

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜனவரி 24
திங்கட்கிழமை

# பாதுகாக்கப்பட்ட வலயங்களிலும் மீன் பிடியில் ஈடுபடலாம் ; யாரும் தடுக்க முடியாது

## வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து வலுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகள் தடைசெய்யப்பட முடியாதவை என்பதே தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடென்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் நியாயமான நோக்கங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மருதங்கேணி, வடமாராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் (22) நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை யாரும் தடைசெய்ய முடியாதென்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் அமைந்துள்ள கட்டைக்காடு எழுவரைக் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு பிரதேச மீனவர்களுக்கு உடனடியாக அனுமதியளிக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

வடமாராட்சி கிழக்கு பிரதேசத்தில் மக்களின் செயற்பாடுக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் குறிப்பாக விவசாயம் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு, பருவகால குளங்களில் கடலுணவு வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பாக ஆராயும் நோக்கில் இக் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி, "சுண்டிக்குளம் தேசிய பூங்காவுக்கான பிரதேசமாக சுமார் 19,000 ஹக்டேயர்களும் நாகர் கோவில் பிரதேசத்தில் சரணாலயமாக மேலும் 19,000 ஹக்டேயர்களும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, மணற்காடு சவுக்குத் தோப்பு பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் பிரகடனப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றினால் வாழ்வாதார செயற்பாடுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் அன்றாட வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக மக்களால் பிரதேச செயலகத்திடம் முறையிடப்பட்டுள்ளது." என்று தெரிவித்தார்.

இதனையடுத்து, வனப் பாதுகாப்பு திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பிரதேச பிரதானிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

அனைத்து தரப்பினரது கருத்துக்களையும் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளை தெரிவித்ததுடன், இதுதொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி எந்தத் தரப்பினது நியாயமான நோக்கங்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் கொள்கை முடிவு மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமென்று தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் பெரும்போக நெல் அறுவடை மும்முரம்



**விஜயரத்தினம் சரவணன்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் இம்முறை பெரும்போக நெல் விளைச்சல் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயிர்ச்செய்கைகளுக்குரிய இரசாயன உரமின்மை மற்றும், களை நாசினி, கிருமி நாசினி என்பவற்றின் விலையேற்றம் காரணமாக அவற்றைத் தாம் வாங்கி பயன்படுத்த முடியாத நிலை, போன்ற காரணங்களினாலேயே இம்முறை தமது பெரும்போக நெற்செய்கையின் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை தற்போது எரிபொருட்களின் விலை அதிகரிப்பினால் அறுவடை இயந்திரக்கூலி முன்பை விடத் தற்போது அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக ஏக்கர் ஒன்றிற்கு தாம் ஒன்பதாயிரம் தொடக்கம், பத்தாயிரம் ரூபா வரையில் அறுவடை இயந்திரக்கூலியாக வழங்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை நெற்செய்கை விளைச்சல் பாரிய அளவு வீழ்ச்சியடைந்துள்ள சூழலில், அறுவடைக்கான கூலி முன்பை விட அதிகரித்திருப்பது தம்மை மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதாக அமைந்துள்ளாதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட நெல்லினை சந்தைப்படுத்துவதிலும் பல்வேறு ஈடர்பாடுகளுக்கு தாம் முகங்கொடுப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக உலர்ந்த சிவத்தப் பச்சை( கோறா) நெல்லினை வியாபாரிகள் 6000ரூபாய்க்கு தம்மிடமிருந்து பெறுவதாகவும், உலராத நெல்லினை 4500ரூபாய்க்கு பெறுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே தாம் கட்டாயமாக நெல்லினை உலரவைத்து சந்தைப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.இந் நிலையில் தற்போது முல்லைத்தீவில் மும்முரமாக நெல் அறுவடை இடம்பெறுவதால், விவசாயிகள் அனைவரும் நெல் உலரவிடும் தளங்களைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே முல்லைத்தீவு விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில், பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வரணி விபத்தில் பெண் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு கறுக்காய் பகுதியில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் 22/01 சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறுக்கு வீதி ஒன்றில் இருந்து பருத்தித்துறை வீதிக்கு ஏறிய உழவியந்திரத்துடன் பருத்தித்துறை வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த பெண் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.





வடமாராட்சி கிழக்கிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உடுத்துறை பிரதேச கடற்றொழிலாளர்கள் கரைவலைத் தொழிலில் ஈடுபடுவதனை நேரடியாகப் பார்வையிட்டார்.

## மீசாலை இளைஞன் மீது காரில் வந்து தாக்குதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கார் ஒன்றில் வாள்கள், இரும்புக் கம்பிகளுடன் வந்த மூவர் கொண்ட குழுவே அப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் நின்ற இளைஞன் மீது தாக்குதல் நடாத்தி விட்டு தப்பித்துச் சென்றுள்ளது. இதில் மீசாலை கிழக்கு மீசாலைப் பகுதியைச் சேர்ந்த காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் 24வயதான இளைஞன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## காணாமல் போயிருந்த மீனவர்கள் கண்டுபிடிப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையிலிருந்து மீன்பிடிப்பதற்காகச் சென்று காணாமல் போயிருந்த மீனவர்கள் இருவரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கெங்காரூபன் (வயது 37), தவராசா சுதர்சன் (வயது 41) ஆகிய இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை (21) காலை மீன்பிடிப்பதற்காகச் சென்றிருந்தனர்.

அன்று மாலையே கரை திரும்பவேண்டிய அவர்கள் நேற்று முன்தினம் (22) வரை கரை திரும்பவில்லையாம். இதனை அடுத்து மீனவர்கள் தேடுதலுக்காக சென்றிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் இருவரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதி மீனவர்கள் கரையில் உள்ளவர்களுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

## மன்னாரில் மூன்று பேருக்கு கொரோனா

**(தலைமன்னார் விஷேட நிருபர் )**

மன்னார் மாவட்டத்தில் சனிக்கிழமை (22.01.2022) 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தனது நாளாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் மன்னார் மாவட்டத்தின் கொவிட் தொடர்பான தனது நாளாந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்கள் மன்னார் நகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும். பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் வங்காலை வைத்தியசாலைகளில் தலா ஒருவருமே கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் ஜனவரி மாதம் 2022 ம் ஆண்டு 22 ந் திகதி வரை இவ் வருடம் 43 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

**வவுனியா விசேட நிருபர்**





சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா (22.01) வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும், இராமகிருஸ்ன மிஷனும் இணைந்து ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் விவேகானந்தரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் நடராஜர் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தமிழ்நாட்டின் கோயம்புதூர் இராமகிருஸ்ணமிஷன் வித்தியாலய சுவாமி, ஹரிவ்ரதானந்த மஹராஜ் மற்றும் கொழும்பு இராமகிருஸ்ன மிஷன் சுவாமி அஸராத்மானந்தமகராஜ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

இதில் சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## வவுனியா நகரில் டெங்கு பரவும் இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

**வவுனியா விசேட நிருபர்**

டெங்கு அபாயத்தையடுத்து வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார பிரிவினரினால் டெங்கு பரவும் இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், டெங்கு பரவும் அபாயம் காணப்பட்ட இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.வவுனியாவில் கடந்த இரு மாதங்களில் 20 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்ஒருகட்டமாக வவுனியா, இறம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையில் நகரின் சுகாய மாதாபுரம், சூசைப்பிள்ளையார்குளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் விதமாக விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அப்பகுதியிலுள்ள வீடுகள், வர்த்தக நிலையங்களின் திண்மக்கழிவுகள் நகரசபை வாகனத்தில் ஏற்றப்பட்டதுடன் நுளம்புக் குடம்பிகள் பெருகும் நிலையில் காணப்பட்ட இடங்களுக்கு எச்சரிக்கை நோட்டீஸ்களும் வழங்கப்பட்டன. இவ் நடவடிக்கையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதாரஊழியர்கள், நகரசபை சுகாதாரஊழியர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

## முல்லைத்தீவில் தொடர் கொள்ளை; முள்ளியவளை வீட்டிலும் பணம் கொள்ளை!

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மை நாட்களாக பகல் கொள்ளை சம்பவங்கள் பல பதிவாகி வருகின்றன. நேற்று முன்தினம் முள்ளியவளை மாமூலைப்பகுதியில் வீட்டில் யாரும் இல்லாத வேளை தளபதி வீட்டின் ஓட்டினைப் பிரித்த கொள்ளையர்கள் வீட்டிற்குள் இறங்கி அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்தி தொண்ணூறாயிரம் ரூபா பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளார்கள்.

அன்று மகளை புலமைப்பரிசில் பரீட்சைக்காக தாயார் பாடசாலைக்கு அழைத்துச் சென்றவேளை குடும்பத்தலைவன் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த வேளை வீட்டில் யாரும் இல்லாத நிலையில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை கடந்த (19.01.2022) அன்று புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உடையார் கட்டு நகர்ப் பகுதியில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் காலை வேளை ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் இறைவணக்கத்திற்கு சென்றவேளை உந்துருளியில் வந்த கொள்ளையன் பாடசாலையின் முன் பகுதியில் உள்ள ஆசிரியர்களின் அறையில் வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் ஒருவரின் கைப்பையினை அபகரித்துச் சென்றுள்ளார். பெறுமதியான தொலைபேசிகள் பணங்கள் என்பன கைப்பையில் இருந்ததாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து (21.01.2022) அன்று பாடசாலை முன்னால் ஆசிரியரின் வெறும் கைப்பையினை வீசி விட்டு சென்றுள்ளார்கள்.

இதுதொடர்பிலும் புதுக்குடியிருப்பு பொலீசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்கள்.

அண்மை நாட்களில் வீடுகளில் உள்ளபொருட்கள், உந்துருளிகள்,உள்ளிட்ட பல்வேறு கொள்ளைச்சம்பவங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## ஆழ்கடல் மீனவர்களின் அனர்த்த தவிர்ப்பு முன்ஆயத்த வேலைத்திட்டம் முன்னெடுப்பு

-அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் எதிர்கொள்ளும் கடல் சார் அனர்த்த தவிர்ப்பு முன்ஆயத்தம் தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் எதிர்கொள்ளும் கடல் சார் அனர்த்த தவிர்ப்பு முன்ஆயத்தம் தொடர்பான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் சனிக்கிழமை (22) அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தென்கிழக்கு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பீடத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆள்கடல் மீனவர்கள் சூறாவளி மற்றும் கடல் அனர்த்தங்களின் போது அனர்த்த குறைப்பு தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தார்.



ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு தொலைத் தொடர்பு கருவி (ஜி.பி.எஸ்) பொருத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீனவர்கள் அனர்த்த காலங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மீனவர்கள் காணாமல் போகுதல், அனர்த்த கால முன்னெச்சரிக்கை வானிலை அறிவிப்பு மற்றும் கடலில் ஏற்படும் விபத்துகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

சாய்ந்தமருதில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கான தொலைத் தொடர்பு கோபுரம் நீண்ட காலமாக செயலிழந்து காணப்படுவதால் அனர்த்த நிலைமையின் போது மீனவர்கள் தகவல் பரிமாறுவது தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் நுழைவாயிலிலுள்ள மண்ணை அகற்றி மீன் பிடிப் படகுகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 16வது ஞாபகார்த்த தினம் இன்று

(பெரியபோரதீவு தினகரன், கல்லடி குறூப் நிருபர்கள்)




2006ஆம் ஆண்டு திருமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16வது ஞாபகார்த்த தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை(24) மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைந்துள்ள ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நடைபெறுகின்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றது. இந்ஞாபகார்த்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஊடக ஆர்வலர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள், உள்ளிட்ட பலதரப்பட்டோரையும் இதில் கலந்கொள்ளுமாறு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம், வேண்டுகோள் விடுத்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை எழுதிவிட்டு

## இறக்கக்கண்டி கடலில் நீராடிய இரு சிறுமிகளில் ஒருவர் மரணம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை இறக்கக்கண்டி பாலத்துக்கு அருகில் நீரில் மூழ்கி சிறுமியொருவர் உயிரிழந்த நிலையில், மற்றுமொரு சிறுமி திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சனிக்கிழமை (22) மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுமி திருகோணமலை பாசல் மாவத்த ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஸானி ஹன்சலா (10 வயது) என தெரியவருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் புலமைப்பரிசில் பரீட்சை எழுதிவிட்டு தனது வகுப்பாசிரியருடன் இறக்கக்கண்டி பகுதிக்கு சென்றபோது, பாலத்துக்கு அருகில் உள்ள கடலில் நீராடிய போது இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், நீரில் மூழ்கிய சிறுமி அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் குச்சவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'கிழக்கு காலநிலையில் திடீர் மாற்றம்'

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கிழக்கு மாகாண காலநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பகல் வேளைகளில் கடும் வெப்பத்துடன் கூடிய வெயில், இரவில், கடும் பனியுடன் கூடிய குளிர்க் காலநிலையும் நிலவுகின்றது. இதனால், மக்கள் அதிகம் காய்ச்சல், இருமல், தடிமன், உடல் உபாதை போன்ற நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கிழக்கில் அண்மையில் நிலவிய மழைக் காலநிலை முடிவுற்றதைத் தொடர்ந்து, மேற்படி புதிய காலநிலை மாற்றம் ஆரம்பித்துள்ளது.

இக்காலநிலை மாற்றமே காய்ச்சல் உள்ளிட்ட ஏனைய நோய்கள் பரவுவதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க வைத்தியசாலைகள், தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல், இருமல், தடிமன், உடல்நோவு போன்ற நோய்களுக்கு சிகிச்சை பெறுபவர்களின் தொகை தினசரி அதிகரித்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ள டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என சுகாதாரத்துறையினர் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

காய்ச்சல் குணமடையாது இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்குமானால், முறையான இரத்தப் பரிசோதனை மேற்கொள்வது அவசியமாகும்.

கர்ப்பிணித் தாய்மார்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதுடன், காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் வேலைத்தளங்கள், பாடசாலைக்குச் செல்லாது, வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

## மூதூரில் டெங்கு நோய் தொற்றாளர்கள் அதிகரிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

கடந்த ஒரு வார காலப்பகுதியில் மூதூர் மற்றும் தோப்பூர் அல்லைநகர் பகுதிகளில் அதிக டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதை அடுத்து, டெங்கு நுளம்பு பெருகும் வண்ணம் சூழலை வைத்திருப்போருக்கு மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் பாவா பாரபட்சமின்றி சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாளும் சிறிது நேரத்தை ஒதுக்கி வீட்டின் உற்புறம் மற்றும் சுற்றுப்புறங்களில் நுளம்பு பெருகக்கூடிய இடங்களை சுத்தம் செய்து கொள்ளுமாறு பொதுமக்களை கோரியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அல்லை நகர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் வீடுவீடாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இராஜாங்க அமைச்சரின் அலுவலகம் திறந்துவைப்பு

கல்குடா தினகரன் நிருபர்

பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் கிழக்கு மாகான இணைப்பு செயலாளரின் அலுவலகம் ஓட்டமாவடியில் சனிக்கிழமை (22) மாலை திறந்து வைக்கப்பட்டது.



பெருந்தோட்டத்துறை அமைச்சின் கிழக்கு மாகாணத்திற்கான இணைப்புச் செயலாளர் கலாநிதி எம்.பி. முஸம்மில் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், பெருந்தோட்டத் துறை இராஜங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் பிரத்தியேக செயலாளர் டீமால் பத்நாயக்கா, அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சதீஸ்கான், வாகரை பிரதேச சபை உப தவிசாளர் சந்திரபால, அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் கிழக்கு மாகாண மக்களின் தேவைகள் இக் காரியாலயத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் பிரத்தியேக செயலாளர் டீமால் பத்நாயக்கா தெரிவித்தார்.

## காரைதீவில் பயிற்சி செயலமர்வு



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

கெப்சோ நிறுவனத்தின் அனுசரணையில் காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான வீட்டு வன்முறை, பாலியல் வன்முறை சம்மந்தமாக பாதிக்கப்பட்டவர்களைக் கையாளும் முறை பற்றிய ஒரு நாள் பயிற்சி செயலமர்வு காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், உட்பட நிருவாக உத்தியோகத்தர் , கணக்காளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர் என பலர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் கெப்சோவின் அனுசரணையில் மூவின சமூகங்களையும் உள்ளடக்கிய வகையில் பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்கு பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர்களின் வரவில் குறைவு

மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி

(காரைதீவு குறூப் நிருபர்)



கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் அண்மைக்காலமாக ஆசிரியர், மாணவரின் வரவு குறைந்து வருகிறது. குளிர் , பனிக்காலநிலை மற்றும் வேகமாக பரவிவரும் கொரோனாச்சூழல் என்பவையே அதற்கு காரணமாகும்.

சமகாலத்தில் ஆசிரியர் ,மாணவர் மத்தியில் காய்ச்சல், தடிமன், தலைப்பாரம் போன்ற அறிகுறிகள் தென்படுவதோடு ஒருவித உடற்சோர்வும் காணப்படுகிறது.இதனால் அவர்கள் பாடசாலை செல்வதை தவிர்த்து வருகின்றனர்.கொவிட் காரணமாக கிழக்கில் பாடசாலைகள் ஏதாவது மூடப்பட்டுள்ளனவா என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடம் கேட்டபோது, இதுவரை அப்படியொரு நிலை ஏற்படவில்லை. எந்தவொரு பாடசாலையும் மூடப்படவில்லை. எனினும் மட்டக்களப்பு கல்முனை போன்ற பிரதேசங்களில் சில பாடசாலைகளில் மாணர்களுக்கு கொவிட் உறுதிப்பட்டுள்ள காரணத்தினால், குறித்த பாடசாலைகளின் வகுப்புகள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன. அதேவேளை மாணவர் மற்றும் ஆசிரியர்களின் வரவும் குறைவடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. மாணவருக்கு வக்சீனும் ஏற்றப்பட்டு வருகின்றது. க.பொ.த.உயர்தரப் பரீட்சையை எதிர்கொண்டுள்ள இன்றைய சூழலில் பெற்றோரும் பிள்ளைகள் மீது கூடிய கவனம்செலுத்தவேண்டும் என்றார்.

## கல்லடியில் கோர விபத்து; தந்தை பலி, மகன் படுகாயம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியில் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு முன்னால் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற பாரிய கோர விபத்துச் சம்பவத்தில், தந்தை பலியானதுடன் மகன் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி பிரதான வீதியில் ஆரையம்பதி பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கி தந்தையும் மகனும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் மீது, பிக்கப் வாகனம் மோதிவிட்டு தப்பியோடியுள்ளது.பிக்கப் மோதிய வேகத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த கனரக நெல் அறுவடை இயந்தரத்தினுள் மோட்டார் சைக்கிள் சிக்கி தந்தை நசுங்குண்டு ஸ்தலத்திலேயே பலியானார்.பலியானவர் ஆரையம்பதி 1 ஐ சேர்ந்த சிவராசா என தெரியவருகிறது.

படுகாயமடைந்த மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கனரக நெல் அறுவடை செய்யும் இயந்தரத்திர வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். காத்தான்குடி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அட்டப்பளம் பாடசாலை மூடப்படும் அபாயம்

(காரைதீவு குறூப் நிருபர்)

மூடப்படும் அபாயம் கல்முனை வலயத்துக்குட்பட்ட, நிந்தவூர் கோட்டத்தின்கீழுள்ள அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையும் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக பாடசாலைச் சமுகம் கவலை தெரிவிக்கிறது.அங்குள்ள அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயமே இவ்விதம் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. ஆசிரியர் போதுமானளவு இன்மையே இதற்கான காரணம் என குற்றம் சாட்டுகிறது.

136 மாணவர்கள், 14 ஆசிரியர்களுள்ள விநாயகர் வித்தியாலயத்தில் முக்கிய பாடமாகக்கருதப்படும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. கணித பாடத்திற்காக இருந்த ஒரேயொரு ஆசிரியர் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இடமாற்றம்பெற்றுச் சென்றிருந்தார். அன்றிலிருந்து அந்த மாணவர்களுக்கு கணிதம் கற்கும் வாய்ப்பு உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் விஞ்ஞான பாடத்திற்கெனவிருந்த ஒரேயொரு ஆசிரியரும் மாகாணத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். பின்தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையையும் இழுத்து மூடப்படுவதற்கு இவ்விடமாற்றங்கள் செய்யப்படுகின்றனவா? என அச்சமுகம் கேள்வியெழுப்புகிறது.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் ஆலயங்கள் உள்ளிட்ட பொதுநல அமைப்புகள் இது விடயத்தில் போர்க்கொடி தூக்கியுள்ளன. தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிடின் போராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாக சூளுரைத்துள்ளன.

## வீதிகளுக்கு பெயர்பலகை பொருத்துமாறு கோரிக்கை

(பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்)

இறக்காமம், வரிப்பத்தான்சேனை பிரதேசத்திலுள்ள பலவீதிகள் நீண்டகாலமாக பெயர்ப்பலகை இன்றி காணப்படுகின்றன. இவ்வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறக்காமம் பிரதேச சபை நிருவாகத்திற்குட்ட பெரும்பாலான உள்ளக வீதிகள் நீண்டகாலமாக பெயர்ப் பலகை இல்லாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள்,வடிகான் மற்றும் வீதி புனரமைப்பு வேலைகளை இனங்காண்பதிலும் அவ் வேலைகள் தொடர்பான விடயங்களை கையாள்வதிலும், கணக்காய்வுக்கு உட்படுத்துவதிலும் நிருவாக ரீதியாக அரச அதிகாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை சில வீதிகளுக்கு இதுவரை சட்டரீதியாக பெயர் இடப்படாத நிலை காணப்படுவதுடன், கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகவும் தவிசாளராகவும் பதவி வகித்தவர்கள் குறித்த வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்துவதற்கோ பெயரிடப்படாத வீதிகளுக்கு சட்டரீதியாக பெயரிடுவதற்கோ உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை கவலையளிப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மூதூர் திருமலை படகு விபத்து; 29 வது நினைவு தினம் நாளை

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் திருமலை கடல் வழிப் படகு விபத்தில் பலியான நூற்றுக்கு மேற்பட்டவர்களின் 29ஆம் வருட சிரார்த்த தினம் நாளை செவ்வாய்க்கிழமை (25) மூதூரில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 1993.01.25 ஆம் திகதி மாலை திருமலையில் இருந்து கடல் வழிப் பயணமாக மூதூர் நோக்கி பயணித்த மோட்டார் 'கட்டர்' படகு மலைப்பகுதியில் கடல் கொந்தளிப்பில் சிக்குண்ட நிலையில் பயணிகளுடன் கடலில் மூழ்கின.

இப்படகில் பயணித்த மூவின சமூகத்தையும் சேர்ந்த அரச ஊழியர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், பொலிஸார் மற்றும் பொது மக்கள் என பலர் இவ்விபத்தில் பலியாகினர்.

## கல்வி அமைச்சர் 27ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம்


(கல்லடி குறூப்நிருபர்)

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் அழைப்பின் பேரில், கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன எதிர்வரும் வியாழக்கிழமை (27) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விசேட விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.


அவரது வருகையின் போது இராஜாங்க அமைச்சர்சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியால் கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்கினேஸ்வரா தேசிய பாடசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ள தொழில்நுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்கு பல்கலைக்கழகம், பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கல்வி மற்றும் உயர்கல்வித்துறை சார் அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடலொன்றிலும் கல்வி அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

# சிறு விளம்பரம்




## மோட்டார் வாகனங்கள்



106 கார்கள் விற்பனைக்கு

WP CAU-9327 Tata nano Car (Auto) 2017, அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 005199



118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு

| | **போக்குவரத்து பிரிவுக்கான டயர்கள் மற்றும் பிற உபகரணங்கள்** | | | | | | | |
| 04 | Tyres for Three Wheelers | 600 Nos | LA/S1/TPT/01/2022 | 14.02.2022 | 29,950,00 | 750.00 | 1,000.00 | இல்லை |
| 05 | Tyres For Jeep 750 x16 (08PR) | 1500 Nos | LA/S1/TPT/02/2022 | 15.02.2022 | 502,550.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 06 | Tyres For Jeep 700x16 (08PR) | 2000 Nos | LA/S1/TPT/03/2022 | 15.02.2022 | 537,900.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 07 | Air Compressor (1000 Liters) | 01 No | LA/S1/TPT/04/2022 | 15.02.2022 | 47,900.00 | 1,000.00 | 1,500.00 | இல்லை |
| 08 | Brake Pad Curing Oven | 01 No | LA/S1/TPT/05/2022 | 15.02.2022 | 50,650.00 | 1,000.00 | 1,500.00 | இல்லை |
| | **போக்குவரத்து பிரிவுக்கு தேவையான உபகரணங்கள்** | | | | | | | |
| 09 | சுவாச சோதனைக் குழாய்கள் (1 பெக்கெட்டில் 10 குழாய்கள் இருக்க வேண்டும்) | 18000 (பெக்கெட்) | LA/S1/19/2022 | 17.02.2022 | 675,000.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| | **ஜெனரேட்டர்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள்** | | | | | | | |
| 10 | Spectrum Analyzer | 01No | LA/S1/COM/01/2022 | 17.02.2022 | 90,650.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |
| 11 | Hybrid Analog/ Digital VHF Drop Link Type Repeaters & Analog/ Digital VHF Drop Link Type Repeater Base | 06 Nos<br>01 No | LA/S1/COM/02/2022 | 17.02.2022 | 510,750.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 12 | Walki – Talki (Hand Held Transceiver) VHF/ FM Analog /Digital 16 Channels & VHF Analog / Digital Repeaters | 100 Nos<br>01No | LA/S1/COM/03/2022 | 17.02.2022 | 284,650.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 13 | 30 KVA Diesel Generator | 06 Nos | LA/S1/COM/04/2022 | 18.02.2022 | 168,200.00 | 3,500.00 | 4,000.00 | ஆம் |
| 14 | 30 KVA Diesel Generator | 01 No | LA/S1/COM/05/2022 | 18.02.2022 | 28,050.00 | 750.00 | 1,000.00 | இல்லை |
| 15 | 12v - 70Ah Battery | 500 Nos | LA/S1/COM/06/2022 | 18.02.2022 | 121,500.00 | 1,000.00 | 1,500.00 | ஆம் |

02. 2006 கொள்முதல் வழிகாட்டல் 3.2 இன் படி **தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறும்**
03. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள **மீளச்செலுத்தப்படாத மனுப்பத்திர கட்டணத்தை** பணமாக செலுத்தியதன் பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில்அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த மற்றைய வார நாட்களில் **மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 03.00 மணி** வரை மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
04. பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிணையுடன் முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் **பி.ப 02.00** மணிக்கு முன் கொழும்பு 01 பொலிஸ் தலைமையகத்தின் பிரதான நுழைவாயிலில் தற்பாலிகமாக அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மனு பெட்டியில் இடுதல் வேண்டும். **நேரம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்**. மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தின் போது கலந்து கொள்ள முடியும்.
05. மாதிரிகளை (Samples) கொழும்பு 01 “பொலிஸ் தலைமையகம்” விநியோகப் பிரிவின் தலைமை எழுதுனரிடம் அல்லது மனுக்களை திறப்பதற்கு நியமிக்கப்பட்ட **திகதி பி.ப. 01.00 மணிக்கு முன்னர்** கையளிக்க வேண்டும். **கால தாமதமாக கிடைக்கும் மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
06. **மாதிரிகளை கையளிக்கும் போது நாமத்தின் பெயரை குறிப்பிடல் கூடாது.**
07. **அனைத்து ஒப்பந்ததாரரும் மேலே அட்டவணையில் இறுதியில் “ஆம்” என குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து மில்லியன் ரூபாவிற்கு அதிகமான ஒப்பந்தங்களுக்காக 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் (eroc.drc.gov.lk) எனும் இணையத்தளத்தை உபயோகித்து முழுமையாக நிகழ்நிலை (Online) மூலம் பதிவு செய்தல் வேண்டும்.**
08. **ஒரு மனுதாரருக்கு ஒரு மனு ஆவணம் மட்டுமே வழங்கப்படும்**
09. **மனுக்கள் இலங்கை ரூபாவினால் மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**
10. **கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்முதல் தொடர்பாக மனுதாரர்களுக்கு அறிவிக்கும் முன்மனுக் கூட்டம் (Pre - bid Meeting) கலந்தாலோசிக்கப்படும்.**

| இல. | பொருள் | ஒப்பந்த இலக்கம் | இடம் | திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| i. | சுவாச சோதனைக் குழாய்கள் (1 பெக்கெட்டில் 10 குழாய்கள் இருக்க வேண்டும்) | LA/S1/19/2022 | பொலிஸ் தலைமையகம் - தரைதளம் கலந்துரையாடல் மண்டபம் | 2022.01.31 - 10.00 am |
| ii. | Air Compressor (1000 Liters) | LA/S1/TPT/04/2022 | | 2022.01.31 - 10.45 am |
| iii. | Brake Pad Curing Oven | LA/S1/TPT/05/2022 | | 2022.01.31 - 11.30 am |
| iv. | Spectrum Analyzer | LA/S1 /COM/01/2022 | பொலிஸ் தலைமையகம் - தரைதளம் கலந்துரையாடல் மண்டபம் | 2022.02.01 - 10.00 am |
| v. | Hybrid Analog/Digital VHF Drop Link Type Repeaters & Analog/Digital VHF Drop Link Type Repeater Base | LA/S1 /COM/02/2022 | | 2022.02.01 - 10.45 am |
| vi | Walki – Talki (Hand Held Transceiver) VHF/ FM Analog /Digital16 Channels & VHF Analog / Digital Repeaters | LA/S1/COM/03/2022 | | 2022.02.01 - 11.30 am |
| vii. | 30 KVA Diesel Generator | LA/S1/COM/ 04/2022 | பொலிஸ் தலைமையகம் - தரைதளம் கலந்துரையாடல் மண்டபம் | 2022.02.02 - 10.00 am |
| viii. | 30 KVA Diesel Generator | LA/S1/COM/05/2022 | | 2022.02.02 - 10.45 am |
| ix | 12v - 70Ah Battery | LA/S1/COM/06/2022 | | 2022.02.02 - 11.30 am |

11. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் மற்றும் தகுதியான மனுதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தின் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**வழங்கல் பிரிவு,**
**02 ஆம் மாடி, பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு 01.**

**மனுக்களுக்கான பிரிவு - 0112-013116 / 3117**
உ.பொ.க - விநியோகம் - 011-2324915 / 0718592072
மாதிரிப் பொருட்கள் பிரிவு - 011-2013711 / 0112013124
பெக்ஸ் இலக்கம் - 011-2320729
மின்னஞ்சல் முகவரி - dir.supplies@police.lk
இணைய தளம் - www.police.lk
நிறுவன பதிவுத் திணைக்களம் - 011 2689215

**பொலிஸ் மா அதிபர்**
**24.01.2022**



# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2021(2022)

க.பொ.த. (உ.தரப் பரீட்சை 2022 பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு மார்ச் மாதம் 05ஆம் திகதி வரையும், நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் உடனடியாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எக்காரணத்திற்காகவும் தாமதிக்கக்கூடாது என்பதை அறியத் தருகின்றோம்.

இதுவரையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட கடிதம், விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் அலுவலகத்தில் பதிவுசெய்து அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் இத்திணைக்களத்தின் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிப்பதன் மூலமோ அல்லது நேரடியாக வருகைதந்தோ விசாரிக்கலாம். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் **www.doenets.lk** எனும் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தமது அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதிபர்கள், தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டையில் பெயர், பாடம், மொழிமூலங்களில் திருத்தங்கள் இருப்பின்,

- **இம்முறை சகல திருத்தங்களும் நிகழ்நிலை முறைமையூடாக மேற்கொள்வதுடன் அதற்காக https://onlineexams.gov.lk/eic இணையத்தளத்தினுள் பிரவேசிக்க வேண்டும்.**
- **ஒரு விண்ணப்பதாரிக்கு இத்திருத்தங்களை ஒரு தடவை மாத்திரமே மேற்கொள்ள முடியும்.**
- **முறைப்படி பரீட்சித்து உறுதி செய்யப்பட்ட பெயர் மாற்றங்களை மட்டும் தரவுத்தொகுதிகள் இற்றைப்படுத்துவதுடன் உறுதி செய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**
- **இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்கள் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது.**
- **திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் 01.02.2022 நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடைகிறது.**

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இப்பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட வினாப்பத்திரங்களுக்கு அவற்றை வாசிப்பதற்கும் வினாக்களைத் தெரிவு செய்வதற்குமாக 10 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்படும்.**

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புக்களை தம்வசம் வைத்துக்கொண்டு விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடந்து கொள்ளல் என்பன பொதுப் பரீட்சைகள் சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2. இப்பரீட்சையில் கணித்தற் பொறிகள், அழிமை (Correction Fluid) என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எனினும் 33,65,66,67 ஆகிய இலக்கங்களுக்குரிய பாடங்களுக்கு மாத்திரம் நிரற்படுத்தப்படாத சாதாரண கணித்தற் பொறிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச்செல்லுதல், தம்வசம் வைத்திருத்தல், பயன்படுத்துதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அவ்வாறான விதிகளை மீறிச்செல்வோர் ஐந்து வருடங்கள் பரீட்சைத் தடைக்குட்படுவர் என்பதுடன் உரிய உபகரணங்கள் அரசுடைமையாக்கப்படலாம்.

விசாரணை : தொலைபேசி எண் : 011-2784208, 2784537
தொலைநகல் இலக்கம் : 011-2784422

தபால் முகவரி : பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, த.பெ.இல 1503, கொழும்பு.

**பரீட்சைக் காலம் முழுவதும் 24 மணித்தியாலயங்களும் செயற்படும் அலகு இலக்கங்கள்:**
**0112785211, 0112785212, 0112784208, 0112784537, 0112786616**
**உடனடி அழைப்பு இலக்கம் 1911**

**எல்.எம்.டீ . தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/3/AL/2021**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2022.01.24 திகதி

# மினுவன்கொடை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

இந்த சபை மூலம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயத்த நிலை கொங்கிறீட் கலவை (ரெடி மிக்ஸ்) வழங்குவதற்காக தகைமை கொண்ட மற்றும் அனுபவம் பெற்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உங்களது விலைமனுக்களை 2022.02.07 ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் ''தலைவர், மினுவன்கொடை பிரதேச சபை, உடுகம்பளை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது கைகளில் கொண்டுவந்து ஒப்படைக்க முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை தமது நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் தயாரித்து அனுப்ப வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2022 ஆண்டுக்கு ஆயத்த நிலை கொங்கிறீட் கலவை வழங்கலுக்கான விலைமனு'' என்று எழுதி அனுப்ப வேண்டும்.

2022.02.07 ஆம் திகதி மு.ப. 10.30க்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவரின் பிரிதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

**பொருள் அட்டவணை**

| இலக்கம் | பொருள் விபரம் | கன மீற்றர் 1இன் விலை ரூபா | |
|---|---|---|---|
| | | VAT/NBT தவிர்த்து | VAT/NBT உடன் |
| 01 | GRADE 20 ஆயத்த நிலை கொங்கிறீட் கலவை | | |
| 02 | GRADE 25 ஆயத்த நிலை கொங்கிறீட் கலவை | | |
| 03 | GRADE 30 ஆயத்த நிலை கொங்கிறீட் கலவை | | |

கீழுள்ள நிபந்தனைகளுக்கு வழங்குநர்கள் இணங்குதல் வேண்டும்.
நிபந்தனைகள்

1. விலைமனுக்கள் மேலுள்ள அட்டவணைக்கு அமைய தம்மால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகளில் அனுப்புதல் வேண்டும்.
2. ஆயத்த நிலை கொங்கிறீட் கலவை வழங்குவதற்காக நிறுவனத்தின் தகைமை மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுவில் விலைமனுதாரரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை சரியாக குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு அதில் ஏதேனும் குறை காரணமாக விலைமனுதாரருக்கு ஏற்படுகின்ற அசௌகரியம் தொடர்பில் சபை பொறுப்பாகாது.
4. விலைமனுவில் ஏதேனும் மாற்றம் செய்வது அல்லது அழித்திருந்தால் அந்த ஒவ்வொரு இடத்திலும் விலைமனுதாரரினால் குறுகிய கையொப்பம் ஒன்றை இட வேண்டும்.
5. VAT மற்றும் NBT அறவிடப்படுவதாயின் அதனை தெளிவாகக் குறிப்பிட்டு கூறுவிலைகளை இடுதல் வேண்டும்.
6. அனுப்பப்படுகின்ற கூறுவிலைகளின் அடிப்படையில் பொருட்களை வழங்குவதற்கு திறன் இருத்தல் வேண்டும்.
7. உயர் தரத்தைக் கொண்ட ஆற்று மணலை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.
8. சேறு அற்ற சுத்தமான நீரை பயன்படுத்த வேண்டும்.
9. கொங்கிறீட் கலவை அளவுகளை சரியாக பேணுதல் வேண்டும்.
10. வழங்கப்படுகின்ற கொங்கிறீட் சிறந்த முறையில் செயற்படுவதற்கு உள்ள தரத்தைக் கொண்ட உயர் தரமான கொங்கிறீட் ஆக இருத்தல் வேண்டும்.
11. தரப்படுத்தப்பட்ட பொருட்களுக்காக கூறுவிலைகள் முன்வைத்தல் வேண்டும். தரம் இன்றிய வழங்கல், தாமதித்தல் மற்றும் அளவீட்டு ஆவணம் தாமதிப்பது காரணமாக கோரல் ரத்துச் செய்யப்படும்.
12. கோரல் மேற்கொண்டு 03 நாட்களுக்குள் வழங்கலை மேற்கொள்ளல் வேண்டும்.
13. நாளொன்றுக்கு தொடர்ச்சியாக 150 கன மீற்றர் உச்சம் வரை கொங்கிறீட் வழங்குவதற்கு திறன் இருத்தல் வேண்டும்.
14. மினுவன்கொடை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் எந்த ஒரு இடத்திற்கும் எடுத்துச் சென்று வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
15. தேர்வு செய்யப்பட்ட வழங்குநர் சபை மூலம் கோருகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் தரச்சான்றிதழ் ஒன்றை வழங்கல் வேண்டும். அதன் இருப்பு தொடர்பிலான பொறுப்பை குறித்த வழங்குநரினால் ஏற்றல் வேண்டும்.
16. 15 – 20 மில்லியன் ரூபா வரை பிற்கொடுப்பனவு அடிப்படையில் கொங்கிறீட் வழங்குவதற்கு திறன் இருத்தல் வேண்டும்.
17. வழங்கலின் பின்னர் விலைப்பட்டியலை சரியாக முன்வைத்த பின் பணம் செலுத்துவதற்கு 7 நாட்கள் தொடக்கம் 30 நாட்களுக்கு இடையே கால அவகாசம் கிடைத்தல் வேண்டும்.
18. பொருட்களை வழங்கும்போது Delivery note பெற்றுத்தருதல் வேண்டும்.
19. கேள்விமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது கேள்விமனுக் குழு வசமானது என்பதோடு கேள்விமனு குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

மினுவன்கொடை பிரதேச சபை, உடுகம்பளை: Tel/ Fax 0332 222335/ 0332222984,
email-minuwangodaps@gmail.com

**தலைவர்**
**மினுவன்கொடை பிரதேச சபை.**

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

## 200,000 R.O.P.P. CAPS இன் கொள்வனவுக்கான விலைமனு

## B/07/2022

200,000 R.O.P.P. CAPS இன் கொள்வனவுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் தொற்று காரணமாக, விலைமனுதாரர்கள் http://ceypetco.gov.lk/public-tenders/ என்ற CPC இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணங்களை தரவிறக்கம் செய்ய முடியும்.

2022.02.14 ஆம் திகதி 14.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படுவதோடு விலைமனு மூடப்படும் நேரம் முடிவுற்ற பின் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, முகாமையாளரின் அலுவலகத்தில் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்) உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**c/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்), இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09, இலங்கை.**

**தொ.: 0094 – 11 – 5455335**
**தொலைநகல்: 0094 – 11 - 5455424**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பிரிவு**

**முத்துராஜவெலவில் இருந்து BIA வரை JET A-1 பரிமாற்றக் குழாயின் நிர்மாணத்திற்கான மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் சான்று நிறுவனம் ஒன்றின் தேர்வு மற்றும் முத்துராஜவெலவில் தற்போதுள்ள முனைய வசதிக்கு சீரமைத்தலுடன் JET A-1 களஞ்சிய தொட்டிகள் மற்றும் அது சார்ந்த வசதிகளின் நிர்மாணம்**

## நீடிப்பு அறிவித்தல்

## B/80/2021

மேலுள்ள தலைப்பின் கீழ் பத்திரிகைகள் மற்றும் இ.பெ.கூ. இணையதளத்தில் வெளியான விளம்பரத்துடன் தொடர்புபட்ட ஏற்கனவே விலைமனு ஆவணங்களை பெற்றுள்ள எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களின் அவதானத்திற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (CPC) இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது. முந்தைய விளம்பரத்தில் பின்வரும் திருத்தம் பற்றி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் அறிவிக்கப்படுகிறது.

2022.01.26 ஆம் திகதி 1400 மணி (இலங்கை நேரம்) மூடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2022.02.09 ஆம் திகதி 1400 மணி வரை (இலங்கை நேரம்) தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனு ஆவணத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி நீடிக்கிறது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**C/o முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியங்கள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியங்கள் செயற்பாடு,**
**1ஆவது மாடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 09.**
**தொ.: 0094 11 5455331**
**தொலைநகல்: 0094 11 5455424**

**சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டம்**

# அறிவித்தல்

## சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபை

1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சம்பளச் சபை கட்டளைச் சட்டத்தின் (136ஆம் அத்தியாயமாகிய) 9ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்கு பின்வரும் ஆட்கள் சுத்திகரிப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையின் உறுப்பினர்களாக இருப்பதற்கு கௌரவ தொழில் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என 1971.08.04ஆம் திகதிய 14961ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 30ஆம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**எம். பி. டீ. யு. கே. மாபா பதிரண,**
**செயலாளர்,**
**தொழில் அமைச்சு.**
**மெஹெவர பியச**
**கொழும்பு -05.**
2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் திகதி

**நியமன உறுப்பினர்கள்**
01. திருமதி. எஸ். அபேகுணரத்ன
02. திரு. ஜே.ஏ.பி.எம். ஜெயசேகர
03. திரு. ஆர்.எம். இரசிக தேசப்பிரிய இரத்னாயகா

**தொழில் தருநர் பிரதிநிதிகள்**
01. திரு. எஸ்.ஜே.ஆர். தொனி பெர்ணான்டோ
02. திரு. பிரசாத் டி சில்வா
03. திருமதி. யசோரவி பக்மிவெவா
04. திரு. டபிள்யு.எம். ஏக்கநாயக்கா பண்டா
05. திரு. தீபால் பெரேரா
06. திரு. எஸ்.என். ரூகநாயகா
07. திரு. ஏ. ஆர். பிட்டிகல

**ஊழியர்கள் பிரதிநிதிகள்**
01. திரு. யு.சி. பெரேரா
02. திரு. யு.சி. பியசேன
03. திரு. பி. ஹெட்டியாராய்ச்சி
04. திருமதி. சுஜீவ ரத்நாயக்கா
05. திரு. சாமரா நாணயக்கார
06. திரு. டபிள்யு.கே. பியரத்ன
07. திரு. எஸ். ஏ. ஜெகத் புஸ்ப குமார

# இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

## தேசிய இளைஞர் படையணி

# விஷேட அறிவித்தல்

**ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு**
**தொழில்வாய்ப்பு பயன்தரவல்ல தொழிற்பயிற்சி பயிற்சி திட்டத்திற்காக தொழிற்பயிற்சி பயிற்சி வழங்குநர்களை தெரிவு செய்தல்**

1. 2021.12.29ஆம் திகதியன்று தினமின, டெயிலி நியுஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகை அறிவித்தல்கள் தொடர்பானது.
2. ஆரம்ப ஆர்வ வெளிப்பாடு வழங்கல் மற்றும் முன்மொழிவிற்கான அழைப்பு திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

   அ. ஆர்வ வெளிப்பாடு வழங்கும் திகதி 2022.02.25ஆம் திகதி வரையும்
   ஆ. முன்மொழிவிற்கான அழைப்புக்களை சமர்ப்பிக்கும் திகதி 2022.02.28ஆம் திகதி வரையும்
3. ஏனைய விபரங்களில் எதுவித மாற்றமுமில்லை

**தலைவர்,**
**திணைக்கள உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு,**
**தேசிய இளைஞர் படையணி,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு -07.**

# மாவட்ட செலயகம் - கொழும்பு

## பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் பதிவை நீடித்தல் – 2022

கொழும்பு மாவட்ட செயலகம் மற்றும் கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் 13 இற்காக 2022ஆம் ஆண்டு சார்பாக பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் பதிவு செய்தல் நீடிக்கப்பட்டுள்ளன.

பதிவுடன் சம்பந்தப்பட்ட வகுதிகள் கீழ்க்காணுமாறு அமையும்

1. இயந்திராதிகள்
2. கணனி, கணனி துணைப்பாகங்கள் மற்றும் வலையமைப்புக்கு உற்படுத்துதல்
3. அலுவலக உபகரணங்கள்
4. அலுவலக காகிதாதிகள், டோனர் வகை
5. வீட்டுத்தளபாடங்களை கொள்வனவு செய்தல்/ தயாரித்தல்
6. அச்சு விடயங்கள் மற்றும் பிரசாரப் பொருட்கள்
7. கட்டிடப் பொருட்கள்
8. துணிமணிகள் மற்றும் தோல் பொருட்கள்
9. விளையாட்டுப் பொருட்கள்
10. வாகன தேவைப்பாடுகள்
11. சேவை வழங்கல்கள்
12. சகல பழுதுபார்த்தல் விடயங்கள்
13. உற்சவ மற்றும் நலன்புரிப் பொருட்கள்
14. நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்
15. உணவுப் பானங்களை வழங்கல்
16. கிருமி நாசினி பொருட்கள் மற்றும் வேறு

(**கவனிக்கவும்:** தற்போது காணப்படும் கொவிட் தொற்று நிலை காரணமாக மாவட்ட செயலக இணையதளம் ஊடாக மற்றும் பதிவு இடம்பெறும் என்பதை தயவுடன் கவனக்கவும்)

02. அதனடிப்படையில் www.colombo.dist.gov.lk என்ற இணைதளம் ஊடாக இலத்திரனியல் முறைமை ஊடாக மாத்திரம் விண்ணப்பங்களை நிரப்பி ஒரு அலுவலகத்திற்கு ஒரு பிரதான வகுதிக்காக மீளளிக்கப்படாத ரூ. 500 தொகையை மாவட்ட செயலாளர் கொழும்பு என்ற பெயரில் உள்ள இல. 7041682 எனும் இலங்கை வங்கி கணக்கு இலக்கத்திற்கு எந்த இலங்கை வங்கி கிளையின் மூலமும் காசு செலுத்தி பெற்றுக் கொண்ட வைப்புப் பத்திரத்துடன் இணையதளத்திற்கு பதிவேற்றம் (Uploard) செய்தல் வேண்டும்.

    (உங்களால் பல அலுவலகங்களுக்கு விண்ணப்பிப்பதாயின் அது பற்றி வங்கிக்கு காசு செலுத்தும் பற்றுச்சீட்டில் வேறு வேறாகக் குறிப்பிடுதல் வேண்டும்)

03. இது பற்றிய சகல விபரங்களும் மேற்படி இணையதளம் ஊடாக பெற்றுக் கொள்ள முடிவதுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடிவது 2022 ஜனவரி 25 மு.ப. 9.00 முதல் 2022 பெப்ரவரி 20 பி.ப. 2.00 வரை மட்டும் என்பதை கவனிக்கவும்.

மேலதிக விபரங்களுக்காக கணக்காளரின் தொ.பே. இல. 011-2368152 அழையுங்கள்

**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம்,**
**எல்விட்டிகல மாவத்த,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு -05.**

# மினுவன்கொடை பிரதேச சபை – விலைகோரல்

**மினுவன்கொடை பிரதேச சபை மூலம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வீதிகளை கொங்கிறீட் இடும் திட்டங்களின் திட்டங்களை மேற்கொள்ளும் தொழிலாளர்களை வழங்குவதற்காக தகைமை உடைய அனுபவம் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

01. வீதிகளை கொங்கிறீட் இடுவதற்கு தேவையான பொருட்கள் சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள் அனைத்தும் பிரதேச சபை மூலம் வழங்கப்படும்.
02. கொங்கிறீட் இடுவதற்கு தேவையான தொழிலாளர்களை (ஆண்கள் - 18 வயதுக்கு மேற்பட்டோர்) மாத்திரம் வழங்குதல் வேண்டும்.
03. தேவையான உணவு வசதிகளை ஏற்றல் வேண்டும்.
04. நிறுவனத்தின் தகைமை மற்றும் அனுபவம் தொடர்பில் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. சபை மூலம் அழைக்கின்ற எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் (பகல், இரவு, அரச விடுமுறை தினம்) எந்த எண்ணிக்கையிலும் சேவையை வழங்கல் வேண்டும்.
06. 2022 ஆம் ஆண்டு முழுவதும் வழங்கப்படுகின்ற விலைக்கு சேவையை பெற்றுத்தருதல் வேண்டும்.
07. கீழுள்ள விலை அளவுகளுக்குள் இருக்கின்ற வீதி கொங்கிறீட் செய்வதற்கு வழங்குநர் உழைப்புக்காக உங்களால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கீழுள்ள படிவத்திற்கு அமைய வெவ்வேறாக விலைகளை முன்வைத்தல் வேண்டும்.
08. விலைமனு சமர்ப்பித்தல் 2022.02.07 ஆம் திகதி பி.ப. 10.00க்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது ''தலைவர், மினுவன்கொடை பிரதேச சபை, உடுகம்பளை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதை மேற்கொள்ள முடியும்.
09. அந்தந்த திட்டத்திற்கு தொடர்புடையதாக பிரதேச சபை மதிப்பீட்டுக்கு அமைய தொழிலாளர் அளவை மேற்கொள்ள வேண்டும்.
10. பிரதேச சபை மூலம் நிர்ணயிக்கப்படும் திகதி மற்றும் காலத்திற்குள் குறித்த பணிகளை மேற்கொள்வதை செய்தல் வேண்டும்.
11. இதற்கு முன்னர் ஏதேனும் நிறுவனம் ஒன்றுக்கு கொங்கிறீட் திட்டத்திற்கு தொழிலாளர் வழங்கியது முன் தகைமையாக கருதப்படும்.
12. விலைமனுக்களை திறப்பது 2022.02.07 ஆம் திகதி மு.ப. 10.30க்கு மினுவன்கொடை பிரதேச சபை தலைமை அலுகலத்தில் மேற்கொள்ளப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். கேள்விமனு குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

| திட்டத்தின் பெறுமதி | தொழிலாளர் வழங்குவது தொடர்பான கட்டணம் |
|---|---|
| 1) ரூபா 1000 தொடக்கம் ரூபா 200,000 வரை | |
| 2) ரூபா 200,001 தொடக்கம் ரூபா 300,000 வரை | |
| 3) ரூபா 300,001 தொடக்கம் ரூபா 400,000 வரை | |
| 4) ரூபா 400,001 தொடக்கம் ரூபா 500,000 வரை | |
| 5) ரூபா 500,001 தொடக்கம் ரூபா 600,000 வரை | |
| 6) ரூபா 600,001 தொடக்கம் ரூபா 700,000 வரை | |
| 7) ரூபா 700,001 தொடக்கம் ரூபா 800,000 வரை | |
| 8) ரூபா 800,001 தொடக்கம் ரூபா 900,000 வரை | |
| 9) ரூபா 900,001 தொடக்கம் ரூபா 1,100,000 வரை | |
| 10) ரூபா 1,100,001 தொடக்கம் ரூபா 1,300,000 வரை | |
| 11) ரூபா 1,300,001 தொடக்கம் ரூபா 1,500,000 வரை | |
| 12) ரூபா 1,500,001 தொடக்கம் ரூபா 1,700,000 வரை | |
| 13) ரூபா 1,700,001 தொடக்கம் ரூபா 1,900,000 வரை | |
| 14) ரூபா 1,900,001 தொடக்கம் ரூபா 2,100,000 வரை | |

**தலைவர்**
**மினுவன்கொடை பிரதேச சபை**
**உடுகம்பளை**

**விசாரணை:- 033 – 2222335/ 0332222984**
**மின்னஞ்சல் முகவரி:- minuwangodaps@gmail.com**

# விலைமனு அழைத்தல்

## இலங்கை அரசு மானியம் வழங்கும் செயற்றிட்டம் ஒன்றாகும்

## கொத்மலை பிரதேச சபை

கொத்மலை பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் சார்பாக அதன் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காணப்படும் நிர்மாணப் பணிகளிற்காகத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது. இதற்கான செலவினம் மற்றும் நிர்மாணிப்புக் காலம் போன்றவை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் பிரகாரம் (NCB) இவ்விலைமனுக்கோரப்படும் இதன் மொத்த உத்தேச செலவினம் ரூபா 50 மில்லியன்களிற்கு குறைவானபடியால் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் (2016/04ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் பயிற்சி அதிகார சபையின் (CIDA) தரம் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

03. பெறுகையைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுள்ள விலைமனுதாரர், அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராகவும் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் பயிற்சி அதிகாரசபையின் கட்டிட நிர்மாணத்துறைக்காகப் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகள் 4ஆம் நிரலில் தகைமை தொடர்பான தகவல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் (ஆவணங்கள் மூலமான அத்தாட்சிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.) உரித்தான தொழில்நுட்பம், நிதியியல் மற்றும் ஏனைய தகைமைகளைப் பூரணப்படுத்தத் தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. கேள்வியின் பெறுமதி 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் சகல கேள்விதாரர்களும் 1987ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பெற்றிருத்தல் வேண்டும்.

06. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொத்மலை பிரதேச சபையின் செயலாளரிடம் (தொ.பே.இலக்கம் 051-2233227) மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கொத்மலை பிரதேச சபை பூண்டுலோயா என்ற முகவரியிலுள்ள பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வார வேலை நாட்களில் 2022.01.24 முதல் பி.ப.2022.02.14 வரை மு.ப.09.00 முதல் பி.ப.3.00 வரை விலைனுப்படிவங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

07. விலைமனுதாரர்கள், கொத்மலை பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான ஆவணத் தொகுதிகளை கொத்மலை பிரதேச சபையின் செயலாளருக்கு மிளளிக்கப்படாத பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி 2022.01.24 முதல் 2022.02.14 வரை மு.ப.09.00 முதல் பி.ப.3.00 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

08. விலைமனுக்கள், நகல்பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு 2022.02.15 அன்று மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும் விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை திறக்கப்படும்.

09. விலைமனுச் சமர்ப்பித்த தினத்திலிருந்து 91 நாட்களுக்கு அவை செல்லுபடியாகுதல் வேண்டும்.

10. அனைத்து விலைமனுக்களுடனும், பின்னால் விவரிக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கான 2022.06.14 வரை செல்லுபடியாகும் வண்ணம் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப்பிணையமொன்று அல்லது குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கொத்மலைப் பிரதேச சபையின் செயலாளரிடம் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11. இது தொடர்பான விலைமனு முன்னோடிச்சந்திப்பு 2022.01.31 அன்று மு.ப.10.00 இற்கு பின்வரும் முகவரியில் நடைபெறும்.

| உருப்படி இலக்கம் | கைத்தொழில் | உத்தேச தொகை VAT இன்றி | ஒப்பந்தக் காலம் (வாரம்) | தேவையான CIDA தரம் | விலைமனுப் பிணைத் தொகை ரூபா | ரொக்கப் பணமாக பிணைத் தொகை ரூபா | விலமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | உத்தேச மூன்றுமாடி கட்டிட நிர்மாணம் (மிகுதி வேலைகள்) கொத்மலை பிரதேச சபை | ரூபா மில் 75.82 | 40 வாரம் | C 4 அல்லது C 3 | 1,516,000.00 | 758,200.00 | 13,000.00 |

**மேற்படி முகவரி : தலைவர், பெறுகைக்குழு,**
**கொத்மலை பிரதேச சபை, பூண்டுலோயா,**
**2022.01.24**

---

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிபென்ன முதல் பத்தேகம வரையான பகுதியின் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனுகோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுத் தவைவரினால், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பிரிவில் பின்வரும் செயற்பாட்டிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | மொத்த தொழிலாளர் நாட்களின் அளவு | விலைமனுப் பிணைமுறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| RDA/ EOM&M/ GOSL/MNT/ STDP/SP/2021/44 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிபென்ன முதல் பத்தேகம வரையான பகுதியின் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குதல் | 60 | 12 | 18,000 | 400,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2022-05-17) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2022.06.14ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்
08. விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022-02-07ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கஹட்டகஹஹேன வல்கம, பண்டாரகமயில் அமைந்துள்ள வீதி அபிவிருத்திக்கு உரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெறும்.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு விலைகோரல் ஆவணத்திற்கு 7,000.00 + 560.00 (VAT) மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாக செலுத்தி கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரச்சபைக்குரித்தான நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2022-01-24ஆம் திகதி முதல் 2022-02-14ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையும் சிங்கள மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர்/ பிரதிநிதி மற்றும் வெற்றிகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் இயைபுடைய கேள்விக்கு பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும். 2022-02-15ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022-02-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெலிபென்ன முதல் பத்தேகம வரையான பகுதியின் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குதல்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் இடத்திலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
    - ➢ பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு)
      வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011 3047806

**தலைவர்**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**01ஆம் மாடி, மகநெகும மகமெதுர,**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

---

**பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:
**இன்ட்ரெபிட் குறூப் கொழும்பு (பிரைவெட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: PV**89102**

பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி:
**2022 ஜனவரி 07**

பதிவு முகவரி :
**இல. 28, லெவல் 3, பிரிமியர் பசிபிக் பினகல் பில்டிங், லொரிஸ் பிளேஸ், R.A.D. மெல் மாவத்தை, கொழும்பு 04**

கம்பனியின் புதிய பெயர்:
**இன்ட்ரெபிட் கொழும்பு (பிரைவெட்) லிமிட்ட**

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**Corporate Services (Private) Limited**
**செயலாளர்கள்**
**Intrepid Colombo (private) Limited**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

# பெறுகை அறிவித்தல்

## தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனம்

## கமத்தொழில் அமைச்சு

## வாகனம் வழங்குநர்களைப் பதிவு செய்தல் கடமையில் ஈடுபடுத்துவதற்காக வாடகை அடிப்படையில்

2022ஆம் வருடத்தில் தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு

1. 15 எண்ணிக்கையான பயணிகளுக்குக் குறைவான (வளிச்சீராக்கம் செய்யப்பட்ட) வேன் வழங்குதல்
2. டபள் கெப் (வளிச்சீராக்கம் செய்யப்பட்ட) வாகனம் வழங்குதல்

பின்வரும் மாவட்ட அலுவலகங்களுக்கு அந்தந்த தேவைப்பாடுகளின் பிரகாரம் வாடகை அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்துவதற்கு முடியுமான வகையில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உங்களால் அந்தந்த மாவட்ட அலுவலகங்களிலிருந்து பயணத்தை ஆரம்பிப்பதற்காக 10 கி.மீற்றருக்குக் குறைந்த தூரத்திற்கான விலையையும் அதற்குப் புறம்பாக அதிகமாகும் ஒரு கி.மீற்றருக்கான விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. மாவட்ட அலுவலகம் - அம்பாறை - முகவரி: சீ 18, பண்டுகாபய மாவத்தை, அம்பாறை
2. மாவட்ட அலுவலகம் - நுவரெலியா - முகவரி: நுவரெலியா விசேட பொருளாதார நிலையம், நுவரெலியா
3. மாவட்ட அலுவலகம் - ஒலுமடு - முகவரி: ஒலுமடு, மாங்குளம், முல்லைத்தீவு
4. மாவட்ட அலுவலகம் - ஹம்பாந்தோட்டை - முகவரி: கமத்தொழில் சேவை நிலையத்திற்கு அருகில், ரிதியாகம, அம்பலந்தோட்டை
5. மாவட்ட அலுவலகம் - குருநாகல் - முகவரி: குருநாகல் வீதி, கலகெதர, வாரியபொல

உங்களது விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் 2022-02-21ஆம் திகதி அல்லது அதற்கு முன் தலைவர், பெறுகைக் குழு, தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனம், ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு அனுப்பவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் மாவட்ட அலுவலகத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனம்,**
**ஜயந்தி மாவத்தை,**
**அனுராதபுரம்.**

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

சுற்றுலாத்துறை அமைச்சு

## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

# விலைமனுக்கோரல்

## வேலைகள் மற்றும் கொள்வனவுகள் – 2022

01. தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணக்களத்திற்கு உரித்தான பின்வரும் பெறுகைகளிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | தகைமைகள் | விலைமனுப் பிணையம்: ரொக்கப் பணமாக வைப்புச் செய்வதானால் ரூபா | விலைமனுப் பிணையம்: வங்கி வரைவு ஒன்றாக எனின் ரூபா | மீளளிக்கப் படாத விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | தேசிய தாவரவியல் பூங்காவின் பிரதான நுழைவு வழியின் இரு மருங்கையும் நவீன மயப்படுத்தல் (உத்தேச செலவினம் 4 மில். ரூபா | C8 அல்லது C7 | 20,000.00 | 40,000.00 | 1,000.00 |
| 2 | பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காவின் பிரதான நுழைவின் இரு மருங்கிலும் உயிர் உள்ள தாவரங்களினால் மதிலொன்றை நிர்மாணித்தல் (உத்தேச செலவினம் 4.5 மில். ரூபா) | வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும் | 22,500.00 | 45,000.00 | 1,000.00 |
| 3 | சீதாவக்க ஈரவலய தாவரவியல் பூங்காவில் குறைவான அளவு வோல்ட் வலுவை விநியோகிக்கும் வலையமைப்பொன்றை நிர்மாணித்தல் மற்றும் பூரணப்படுத்தல் (உத்தேச செலவினம் 4.5 மில். ரூபா) | E7 | 22,500.00 | 45,000.00 | 1,000.00 |
| 4 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு சீருடைகளை வழங்கல் | வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் | 15,000.00 | 30,000.00 | 1,000.00 |

02. விலைமனுக்கோரல் நாடு தழுவிய தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

03. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.01.24 முதல் 2022.02.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஒவ்வொரு கருமத்திற்குமான மீளளிக்கப்படாத படிவக்கட்டணத்தைச் செலுத்தி (தொகுதி ஒன்றிற்காக) விலைமனு மாதிரிப்படிவங்களை பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பிரதான அலுவலகக் கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

    விலைமனு மாதிரிப்படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ICTAD/CIDA பதிவுப் புத்தகம் (மூலப்பிரதி)/ வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன் நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் கூடிய விண்ணப்பக் கடிதமொன்று சமர்ப்பிக்கப்படல் கட்டாயமாகும்.

04. மேற்படி விலைமனுப் பிணையமானது பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் என்ற பெயரில் அரச அங்கீகாரம் பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறன்றேல் அப் பிணையை ரொக்கப்பணமாக பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் வைப்புச் செய்யலாம். விலைமனுப்படிவங்களுடன் விலைமனுப் பிணையும் இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுப் பிணையமானது விலைமனுத் திறக்கப்படும் தினமான 2022.02.15 முதல் முன்வரும் 90 நாட்களுக்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.

05. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக உரியவாறு முத்திரையிட்டு (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு) 2022.02.15 அன்று பி.ப. 2.30 இற்கு முன்னர் 'தலைவர், திணைக்களப் பாரிய பெறுகைக் குழு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த.பெ. 14, பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான பெறுகைக்கான பெட்டியில் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்றுள்ள பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் உரிய தபாலுறைகளில் உரித்தான ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்படல்வேண்டும்.

06. விலைமனுத் தொடர்பான தீர்மானமெடுக்கம் முழுமையான உரிமை திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகுமென்பதுடன் இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.

    (இது தொடர்பான மேலதிக விபரங்களை 081-2388254 என்ற தொலைபேசி மூலம் இத்திணைக்களத்தின் பிரதான கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம்)

07. விலைமனு முன்னோடிச் சந்திப்பு 2022.02.07 அன்று மு.ப. 10.30 இற்கு தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,**
**பேராதெனிய.**
2022.01.24

# மெய்வல்லுநர் சங்க நூற்றாண்டு விழா அரை மரதனில் சண்முகேஸ்வரனுக்கு மூன்றாமிடம்

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி நேற்றுமுன்தினம் (22) காலை நடைபெற்ற அரை மரதன் ஓட்டப் போட்டியில் மலையக வீரர் குமார் சண்முகேஸ்வரன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் முதலிடங்களை இந்திய வீர, வீராங்கனைகள் பெற்றுக்கொண்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

21 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாக நடைபெற்ற இந்த அரை மரதன் ஓட்டப்போட்டியானது பத்தரமுல்லை தியத்த உயனவுக்கு அருகில் இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகியது. இதன்போது விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கொடியை அசைத்து போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவுகள் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குகொண்ட இப்போட்டியின் ஆண்கள் பிரிவில் முதலிடத்தை இந்தியாவின் உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த கார்த்திக் குமார் பெற்றுக்கொண்டார். போட்டியை அவர் ஒரு மணித்தியாலமும் 05 நிமிடங்கள் 02 செக்கன்களில் ஓடி முடித்தார்.

போட்டியை ஒரு மணித்தியாலமும் 7 நிமிடங்கள் 15 செக்கன்களில் நிறைவு செய்த இந்தியாவின் ராஜஸ்தானைச் சேர்ந்த தர்மேந்திரன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.





இலங்கை இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மரதன் உள்ளிட்ட நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் பிரகாசித்து வருகின்ற ஹற்றன் வெலிஓயாவைச் சேர்ந்த குமார் சண்முகேஸ்வரன் இப்போட்டியில் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இவர் போட்டித் தூரத்தை ஒரு மணித்தியாலமும் 7 நிமிடங்கள் 28 செக்கன்களில் நிறைவு செய்திருந்தார். இப்போட்டியின் நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களை முறையே இலங்கை இராணுவத்தின் தர்ஷன சந்தருவன் (ஒரு மணித்தியாலம் 7 நிமிடங்கள் 34 செக்கன்கள்) டிலான் சந்தருவன் (ஒரு மணித்தியாலம் 7 நிமிடங்கள் 47 செக்கன்கள்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் முதலிடத்தை இந்தியாவின் சஞ்ஜீவனி ஜாதவ் பெற்றுக்கொண்டார். போட்டியை அவர் ஒரு மணித்தியாலமும் 16 நிமிடங்கள் 06 செக்கன்களில் நிறைவு செய்தார்.

இப்போட்டியில் இரண்டாவது இடத்தை ஒரு மணித்தியாலமும் 19 நிமிடங்கள் 48 செக்கன்களில் நிறைவு செய்த இலங்கை கடற்படையைச் சேர்ந்த மதுமாலி பெரேரா பெற்றுக்கொள்ள, மூன்றாவது இடத்தை இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சாமினி சமுதிக்கா பெற்றார். இவர் போட்டித் தூரத்தை ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களில் ஓடி முடித்தார்.



இப்போட்டியில் நான்காவது இடத்தை இலங்கை இராணுவத்தின் நிசன்சலா பண்டார (ஒரு மணித்தியாலம் 23 நிமிடங்கள் 39 செக்கன்கள்) பெற்றுக்கொண்டதுடன், ஐந்தாவது இடத்தை இலங்கை கடற்படையின் நிலூஷி பெர்ணான்டோ (ஒரு மணித்தியாலம் 24 நிமிடங்கள் 24 செக்கன்கள்) ஆகிய இருவரும் பிடித்தனர்.

5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆரோக்கியத்துக்கான ஓட்டப் போட்டியின் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டியின் ஆண்கள் பிரிவில் கம்பஹா பண்டாரநாயக்க மத்திய வித்தியாலய மாணவன் யஹலிய சங்கீத் முதலிடத்தைப் பிடித்தார். இவர் போட்டித் தூரத்தை 14 நிமிடங்கள் 03.01 செக்கன்களில் நிறைவு செய்தார்.

இப்போட்டியில் 15 நிமிடங்கள் 09.00 செக்கன்களில் ஓடி முடித்த கந்தானை புனித செபஸ்தியன் கல்லூரி மாணவன் விஹங்க பிரபோத் இரண்டாவது இடத்தைப் பிடித்ததுடன், திவுலப்பிட்டிய மத்திய கல்லூரி மாணவனான அனுஷ்க லக்ஷான் 15 நிமிடங்கள் 14 செக்கன்களில் ஓடி முடித்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பெண்கள் பிரிவில் ஜா எல துடெல்ல நிமல மரியா வித்தியாலயத்தின் ஒஷாதினி நிலுமிக்கா முதலிடத்தையும், குளியாப்பிட்டிய இஹல கடிகமுவ மத்திய வித்தியாலயத்தின் அயேஷா சந்துமினி இரண்டாவது இடத்தையும், பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயத்தின் ரஷ்மி அமண்டா மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். போட்டியின் பிறகு இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட வீரர்களுக்கு பணப்பரிசு மற்றும் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மே.தீவுகளை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறிய இலங்கை 19 வயது அணி



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் ஐசிசி இன் 19 வயதின் கீழ் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் டி குழுவில் பங்குபற்றும் இலங்கை தனது கடைசி லீக் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 3 விக்கெட்டுகளால் வெற்றிகொண்டது.

ஏற்கனவே ஸ்கொட்லாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளை வீழ்த்தியிருந்த இலங்கை அணி, ஹெட்ரிக் வெற்றியோடு 6 ஆண்டுகளுக்குப் பிறகு இளையோர் உலகக் கிண்ண காலிறுதியில் விளையாடுவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொண்டது.

19 வயதின்கீழ் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாடிவரும் இலங்கை அணி தனது கடைசி லீக் போட்டியில் போட்டி ஏற்பாடு நாடான மேற்கிந்தியத் தீவுகள் அணியை கடந்த (21) எதிர்கொண்டது.

சென்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸின் பெஸ்ஸட்ரேவில் நடைபெற்ற தீர்மானமிக்க இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் துனித் வெல்லாலகே முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

அதன்படி முதலில் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகளின் ஆரம்ப வீரர்களான மத்தியூ நண்டு (7) மற்றும் சக்கி பார்ரஸ் (16) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அதன்பின்னர் ஜோடி சேர்ந்த கெவின் விக்கமும், டெட்டி பிஸொப்பும் 3ஆவது விக்கெட்டில் 68 ஓட்டங்களைப் பகிர்ந்து வலுச்சேர்த்தனர். ஆனால், மொத்த எண்ணிக்கை 102 ஓட்டங்களாக இருந்தபோது டெட்டி பிஸொப் 45 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து வந்த ஜோர்டன் ஜொன்சன், கெவின் விக்கமுடன் இணைந்து மற்றுமொரு அரைச்சத இணைப்பட்டத்தை மேற்கொண்டனர். இதில் கெவின் விக்கம் 91 பந்துகளில் 56 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க, ஜோர்டன் ஜொன்சன் 3 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டு 56 பந்துகளில் 47 ஓட்டங்களை எடுத்து ஒய்வறை திரும்பினார்.

பின்வரிசையில் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிவால்டோ கிளார்க் நிதானமாக ஆடி 45 ஓட்டங்களைப் பெற்றார்.




இறுதியில் மேற்கிந்திய தீவுகள் 19 வயதின்கீழ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 250 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் துனித் வெல்லாலகே 3 விக்கெட்டுகளையும், மதீஷ பத்திரன 2 விக்கெட்டுகளையும் அதிகபட்சமாக வீழ்த்தினர்.

பின்னர் 251 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 19 வயதின்கீழ் அணி, 48.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 251 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

ஆரம்பத்தில் 4 ஓட்டங்களுக்கு சமிந்து விக்ரமசிங்கவின் விக்கெட்டினை இழந்து இலங்கை அணி தடுமாறிய போதும், ஷெவோன் டேனியல் மற்றும் சதீஷ ராஜபக்ஷ சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இரண்டாவது விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும் 52 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்த போதும், ஷெவோன் டேனியல் 34 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவரின் ஆட்டமிழப்பை தொடர்ந்து களமிறங்கிய சகுன நிதர்ஷன லியனகே 9 ஓட்டங்களுடன் ஒய்வறை திரும்பினார்.

அடுத்ததாக களமிறங்கிய அன்ஞல பண்டார, சதீஷ ராஜபக்ஷவுடன் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச்சென்றார்.

இதில் அன்ஞல பண்டார 52 பந்துகளில் 40 ஓட்டங்களையும், சதீஷ ராஜபக்ஷ 115 பந்துகளில் 76 ஓட்டங்களை விளாசி, அணியை சிறந்த நிலைக்கு அழைத்துச்சென்று ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் துனித் வெல்லாலகே (15), ரவீன் டி சில்வா (13) மற்றும் ரனுத சோமரத்ன (28) ஆகியோரது பங்களிப்புடன் இலங்கை அணி வெற்றியிலக்கை அடைந்தது.

மேற்கிந்திய தீவுகள் 19 வயதின் கீழ் அணியின் பந்துவீச்சு சார்பில் மெக்கெனி கிளார்க் மற்றும் இஷை தோர்னி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீதம் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை 19 வயதின்கீழ் அணி, இம்முறை இளையோர் உலகக் கிண்ணத்தில் ஹெட்ரிக் வெற்றியைப் பதிவுசெய்து, டி குழுவில் 6 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து காலிறுதிக்கு தகுதிபெற்றது.

இறுதியாக இலங்கை அணி, 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ஐசிசி இன் 19 வயதின்கீழ் உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதி சுற்றுக்குத் தகுதிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பிரிவில் அவுஸ்திரேலிய அணி 4 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பிடித்து காலிறுதிக்கு முன்னேற, மேற்கிந்திய தீவுகள் மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் அடுத்த சுற்று வாய்ப்பை இழந்தது.

# கல்முனை ஹொலிபீல்ட் 26 ஆவது ஆண்டு விழா

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



கல்முனை பிரதேசத்தின் மூத்த விளையாட்டுக்கழகங்களுள் ஒன்றான கல்முனை ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தின் 26 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் அங்கத்தவர் ஒன்று கூடலும் விளையாட்டுக் கழக செயலாளர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் கழகத்தின் தலைவரும், சமாதான ஊடக அமைப்பின் தலைவருமான எம்.எம். ஜெஸ்மின் தலைமையில் கடந்த சனிக்கிழமை சம்மாந்துறை சமாதான கற்கைகள் நிலைய வளாக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் இந்திக நளீன் ஜயவிக்ரம, செயலாளர் சிதத் லியனராய்ச்சி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கழகத்தின் தலைவராக மீண்டும் எம்.எம். ஜெஸ்மின், செயலாளராக பேராசிரியர் கலாநிதி எஸ்.எல். றியாஸ், பொருளாளராக எம்.எச். எம். ஹனீஃப் ஆகியோரும் தவிசாளராக சமீர் யுனூஸ் மற்றும் பிரதித்தவிசாளராக யூ.எல்.எம். றியாஸ், உப செயலாளராக பஸ்மி காசிம், கலாசார செயலாளராக மௌலவி சபா முஹம்மத் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வின் இறுதியில் அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத்தின் தலைவர் இந்திக நளீன் ஜயவிக்ரம, செயலாளர் சிதத் லியனராய்ச்சி ஆகியோர் கல்முனை ஹோலிபீல்ட விளையாட்டு கழக நிர்வாகிகளினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




# மேற்கிந்திய தீவுகள் அணியிடம் மண்டியிட்டது இங்கிலாந்து அணி

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது இருபதுக்கு இருபது போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

5 இருபதுக்கு இருபது போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் கென்சிங்டன் ஒவல் மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவு செய்ய, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது.

எதிரணியின் பந்துவீச்சை எதிர்கொள்ளமுடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்த இங்கிலாந்து அணியால் 19.4 ஒவர்களில் 103 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் கிறிஸ் ஜோர்டான் அதிகபட்சமாக 28 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் ஹோல்டர் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனை அடுத்து 104 என்ற வெற்றி இலக்கோடு பதிலளித்துஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 17.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டினை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

ஷாய் ஹோப் 20 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க பிராண்டன் கிங் 52 ஓட்டங்களையும் நிக்கோலஸ் பூரன் 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.